14 OCT 1950
MADRAS

பரமபதி துணை.

பதினெண் சித்தர்களி லொருவராகிய

# புலஸ்தியர்

திருவாய்மலர்ந்தருளிய

## வைத்திய சூஸ்திரமும்,

# வாத சூஸ்திரம் 300.

மதுரை வித்துவான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்றபடி

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம. குருசாமிக்கோனர் சன்

G. இராமசாமிக்கோன்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி குருசாமிக்கோனர்சந்து

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

காப்பி 500 ) 1950 ( விலைரூ 1—0—0

( மூன்றாம் பதிப்பு )

LC
N50
101662
MADRAS



உ

பரமபதிதுணை.

புலஸ்தியர் திருவாய் மலர்ந்தருளிய

# வைத்திய சூஸ்திரம்.

திருவிருக்கும் பொதிகைமலை தன்னில்வாழும்-தெட்சணா மூர்த்திகுரு பதத்தைப்போற்றி, கருவழலை உருவெடுத்த மார்க்கஞ் சொல்லக்-கரிமுகனும் அறுமுகனுங் கமலத்தாளும், இருவினையை உருப்படுத்தும் வேதன்தேவி-இன்பமுட னிவர்களுட பதத்தைப் போற்றி-. அருவுருவாய் விளங்கிமனத் தறிவாய்நின்ற-அப்பொருளை யெப்பொருளும் அறிவோர்காப்பே. (1)

சித்தரெல்லாம் கருவழலை பிடித்தே ஆட்டிச்-செகம்விளங்க நீல்காட்டி வேதைபோட்டார், முத்தரெல்லாம் கருவழலை பிடித்து நித்தம்-முனைகண்டு சுழிமுனையின் முடிவிற்சேர்ந்தார், பத்தரெல்லாங் கருவழலைத் திரமேசெய்து - பார்விளங்க நதியாடி முத்தி பெற்றார், சுத்தமது கருவழலை குருவாற்கண்டு-சோதிபார் வெளியாகத் தோணுந்தானே. (2)

தானென்ற கருவழலைப் பேர்தான்சொல்லத்-தரணிதனி லாரறிவார் தானேதானும், வானென்ற புவியேழும் நிறைந்ததேயென் றும் - மறைபொருளாய் நின்றகரு வழலைதன்னைக், கோனென்ற குருபதத்தை யடுத்துநித்தம்-குறிப்பாக நிழற்போலே காத்தபேர்க்குப், பானென்ற அமுதமங்கே கொடுத்துஉன்னைப் - பார்த்துமன மிரங்கியருள் புரிவார்காணே. (3)

காணவே வழலையுட பிறப்பைச் சொல்லார்-கருவாளி நீயானுற் கண்டுகொள்வாய், தோணவே நகாரமதுக் காதிபீடம் - சொல்லார்கள் மால்நிறலா மீனமேறிப், பூணவே வளர்ந்திருப்பார் மதியினாலே புகழ்பெரிய கதிரவனா லழிந்துபோவார், நாணமில்லா அகாரத் தைப் பற்றியேறி-நடுவிருந்த ஆசானைக் கண்டுதேறே. (4)

தேறுவது யாரென்றால் சித்தன் சித்தன்-செகமதிலே வாழ்ந் திருப்பார் யோகம் பெற்றோர், ஆறுவது யாரென்றால் வழலைதன்னை-அடக்கிமன தொன்றாகி யறிவிற்சேர்ந்தோர், கூறுவது அதன்பெ ருமை மெத்தவுண்டு-குடிலமது அதின் குணத்தைக் கூறக்கேளு, மாறுவது முக்குணமாய் விளங்கியெங்கும்-மகாமாயை யாகிநின்று வளரும்பாரே. (5)

பாருநீ அஞ்சுடனே கூடிவாழும்-பார்த்திருக்க ஒன்றைவிட்டே ஒன்றிற் சேரும், காருநீ வழலையுட கருவேயாகும்-கைமுறையாயெடு த்தடைப்பாய் கலசத்துள்ளே, வாருநீ சுத்தசெல மாசான் சொன்ன டக்கமது கைமுறையாய் வடித்துக்காய்ச்சு, சேருநீ வழலையுடன் மூன்றைக்கூட்டிச் -சிறுபுடமாய்ப் போட்டெடுக்கக்குருவுமாச்சே. (6)

ஆச்சிந்த வழலையுட மார்க்கமெத்த - ஆடலாங் கவர்கோடி வித்தையெல்லாம், போச்சிந்த வழலையுட குருவைவிட்டாற்-பூரண மாய்ப் பிறப்பெல்லாம் பொன்னதாச்சு, ஏச்சிந்த வழலையுட புறட்டி னாலே-ஏழுவகைத் தோற்றங்கள் கெடுதலாச்சு, வாச்சிந்த வழலை குருச் செய்தபேர்க்கு-மகத்தான பிறப்பறுத்து வாழலாமே. (7)

வாழலாம் எட்டுடனே நாலைச்சேர்த்து-மாளமட்டும் அரைத் தெடுத்துப் புடத்தைப்போடு, தேளடா பிறவியென்ற சரக்கை யெல்லாம்-சென்றவுடன் கொன்றுவிடும் திறமோமெத்த, வாழலாம் தரித்திரிய மெல்லாம்போச்சு-மனமான வழலையுட சுண்ணப் போக்கு, நாளடா திங்களொரு கணமேஆகும். நாதாந்த மனோ மணித்தாய் சொன்னாள் பாரே. (8)

சொன்னாளே பொதிகைகுரு முனிவனுக்குச் -சூட்சமெல்லா மவருரைத்த நூலைப்பாரு, என்னாளோ எவ்யுகமோ அவர்தானையா-இருந்தாரே பொதிகைமலை தன்னில்மேவி, வண்ணானே கண்டெடு த்த வழலைப்போக்கை-வகையுடனே கண்டுரைக்க வகையோயில்லை முன்னாளில் விட்டகுறை தொட்டபேர்க்கு - யோசமில்லை வழலை குரு வாகும்பாரே. (9)

சூருவான வழலையுட போக்கையெல்லாம் - கூறுகிறேன் நகார த்திற் றெட்டுப்போடக், கருவாகக் கட்டிப்போம் பூதமஞ்சக் - கைக்கூட வித்தையிது கருதிப்பாரு, திருவான சரக்குமொரு தொண்ணூற்றாறு - திறங்கட்டிப் பெலனுகும் உற்றுப்பார்த்தால், உருவாக உன்னைவந்து காத்துசித்தம் - உண்மைபார வெளிதனிலே ஒடுங்கும்பாரே. (10)

பாருநீ கால்தலையில் வழலைச்சுண்ணம் - பட்டவுடன் அப்புட னே, ரவியிற்கட்டும், காருநீ குருபதத்தைக் கூட்டிக்காரு - கற்பமெ ன்ற மாயையெல்லாங் கழன்றுபோகும், சேருநீ வழலையுட கருவைக் கண்டு-சேர்க்தாட அறிவன்றிப் போதமுண்டோ, ஆருநீசொன்னாலும் அறியமாட்டார் - ஆனந்த மனோன்மணித்தாய் அறிவிப்பாளே. (11)

பாளான க்ளீம்பறவே வழலைச்சுண்ணம் - பணவிடைதா னீய்க் தாக்காற் சுத்திபாச்சு, காளானசெந்தூரங் களங்குபற்பம் - நலமயன மெட்டுபரி சனமாம்வேதை, கோளான பிறவியொடு அட்டகர்மம் - கொழுகிநின்ற வழலையுட குருவைவிட்டாற், பாழாகும் இதை யறிக்து கண்டால்முத்தி - பலிக்குமடா யீராறு படிக்கமுற்றே (12)

முத்திதருங் கும்பமுனி பதத்தை நித்தம் - முனைமூக்கு மத்தி யிலே ஊணிப்பாரு, சித்திதரும் புத்திதருங் கர்மம்போகும் - செக சால மாயையெல்லாக் தீருந்தீரும், பத்தியுட ஞானை நித்தங்காரு - பணிவிடைகள் தப்பாமற் பாரு பாரு, அத்திபுரம் மூலவட்ட மையன் கோவில் - அடையாளம் அதன்பெருமை அறிவாற்காணே. (13)

புலஸ்தியர் வைத்திய சூஸ்திரம் 13 முற்றிற்று.

முற்றிற்று.

உ

பரமபதி துணை.

புலஸ்தியர் திருவாய்மலர்ந்தருளிய

# வாதசூஸ்திரம் நூ.

ஆதியந்தம் நிறைந்ததொரு சோதிபாதம் - அன்பான ரிஷிக ளுட பாதம் போற்றி, நீதியா யெனையாண்ட வகத்தீசர்பாதம் - நினைந்துருகிப் போற்றிசெய்து நேர்மையாகச், சோதியெனு மம் பிகைப்பெண் பாதம்போற்றித் - தொல்லுலகில் ரசவாதம் நிலைக்க வேண்டி, பாதிமதி சடையணிந்தோர் பாதம் போற்றி - மகருவி றேன் சூஸ்திரமுந் நூறுந்தானே. (1)

தானென்ற கும்மியெழு நூறுஞ்சொன்னேன் - தாஷ்டிகமா யைந்நூற்றிற் பாகஞ்சொன்னேன், வானென்ற அதைக்குறுக்கி மூந்நூறாக - வகையாகக் கைபாகம் வரிசையாக, நானென்ற வுலகத் தோர் வாதஞ்செய்து - நலமாகப் பிழைக்கும்வகை நன்மையாக, கோனென்ற குருவருளால் வாதக்காடு - குணமாக அறிந்தவர்க்குக் கொள்ளைதானே. (2)

கொள்ளையாம் லிங்கபற்பம் அயத்தின்செம்பு - குணமான மெழுகோடு தைலப்போக்கு, சள்ளையிதி இல்லாமல் வீரப்போக்கு - சரியான கட்டுவகை செந்தூரங்கள், வள்ளலார் கைபாகம் வரிசை யாக வடிவான சூதபற்பங் கற்பூரங்கள், உள்ளபடி சொல்லு கிறேன் உலகந்தன்னில் - ஓகோகோ யிந்தநூ லுறுதிபாரே (3)

## லிங்கரச பற்பம்.

உறுதியாய் முன்னேதான் லிங்கபற்பம் - உகந்துநீ வைத்திடுவா யுலகத்தோர்க்கு. அறுதியாய்ப் பலபிணிகள் தீர்த்துவிட்டு - ஆண்மையாஞ் சிவனத்தைப் பண்ணிக்கொண்டு, உறுதிபெற மூசு வாதம் யோகமார்க்கம் - உற்பனமாய் ஞானமொடு வழலைபாகம். கருதியே யிடைபாகம் செய்பாகந்தான் - கைபாகஞ் சொல்லு கிறேன் கடத்தைப்பாரே. (4)

கடத்தைபார் சண்டாச பற்பங்கேளு - நலமாக படித்தனத்தில் நிற்கும்பாகம், இடத்திவிட்டு யெரிக்கிறதோர் பாகமாகும் - நேர்த்தியாய்ப் பலபிணிகள் தீரும்பாகம், மடபதிகள் மறைத்ததோர் பாகமெல்லாம் - மயங்காமல் பசலைக்குத் தோணும்பாகம், திடத்திட்டே புவியிலுள்ளோர் பிழைக்கச் சொன்னேன் - திறமாக வைத்தியர்க்கு ஆணியாமே. (5)

ஆணியாம் லிங்கமது சேர்தானென்று - அடைவாகக் கல்வத்திற் பொடியாய்ப்பண்ணி, காணியாங் கொடிவேலி ரெண்டுசேரு - காரணமா யிடித்துநீ தெள்ளிக்கொண்டு, வாணியாம் பொடியாக்கிலிங்கத்திட்டு - வடிவாக ரெண்டுமொன்று யரைத்துத்தூளாய், காணியாய்க் கடத்திவிட்டு மேலேமூடி - நலமாகச் சீலைமண் வலுவாய்ச் செய்யே. (6)

செய்துநீ வாலையென்ற அடுப்பிலிட்டுச் - செயமாக நாற்சாமம் எரித்துவாங்கு, சுய்துமே தீயாற்றி யெடுத்துப்பாரு - நலமாக வாலை ரசம் மேலேநிற்கும், எய்துமே வழித்ததனை யெடுத்துக்கொண்டு இதமாகத் துணிதனிலே விட்டுக்கேளு, உய்துமே பிழிந்திட்டுக், கல்வந்தன்னில் - ஒழுங்காக விட்டுநீ காட்டக்கேளே. (7)

## புகைநீர்.

காட்டமாய்ப் புகைநீரு வொன்றுகேளு - நலமாக வெடியுப்பு அஞ்சாங்காய்ச்சல், வாட்டமாய்ப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு வடிவாகச் சீனமது யிருபத்தினாலு, கூட்டமாய் ரெண்டுமொன்று பிடித்துக்கொண்டு - குணமான வாலையென்ற சட்டியிட்டு, மூட்டவே வாலைதன்னை மூடிமைந்தா - முனிவாகச்சீலைமண் செய்திடாயே. (8)

சீலையென்ற மண்ணதுவே செய்தபின்பு - சிறப்பாக அடுப்பேற்றித் தீயைமூட்டி, வாலையென்ற தீநீரு முன்னேவெள்ளை - வடிவான வெள்ளைதனை வீசிப்போடு, காலையென்ற புகைமஞ்சள் நீருமாகும் - கனிவான மஞ்சள்நீர் தன்னைவாங்கு. வாலையென்ற சூதத்தைக் கல்வத்திட்டு - வடிவான புகைநீரை விட்டுக்கேளே. (9)

விட்டுமே சூரியனில் வைத்தபின்பு - விதமாகக் காளான்போற் பூத்துநிற்கும், வட்டுமே பூத்ததெல்லா மெடுத்துக்கொண்டு - வடிவாகப் புகைநீரை விட்டுவாநீ, கட்டுமே பின்பொருக்கால் பூத்துநிற்கும் - கனிவாகப் பூத்ததெல்லாங் காயவைத்து, நட்டுநீ சீனமது சேருவாங்கு - நலமான வண்டோடுஞ் சேருதானே. (10)

## அண்டச் சுண்ணம்.

தானான அண்டோடு சத்திகேளு - த[illegible]ப்பான் உவர்மண்ணுஞ் சுண்ணம்நேரே, வானாக ஓடுதனி விட்டுக்கேளு - வரிசையாய்க் குமுரயெரி கழுவிப்போடு, கானான சத்திசெய்த அண்டவோடு - நாதலாய்ச் சேரொன்று சினுக்காரம், தானான சேரொன்று கல்வத்திட்டுத் - தன்மையாய் ரெண்டுமொன்றா யரைத்திடாயே. (11)

அரைத்திடவே பழச்சாற்றால் சாமம்நாலு - அதைக்காயவைத்து நீ பின்பு கேளு, பரைத்திடவே வெண்கருவால் நாலுசாமம் பதிவாகக் காயவைத்து வில்லைதன்னை, மரைத்திடவே பெரியபுடமிட்டுத்தீரு - மயமாகச் சீனமது பொங்காதப்பா, குரைத்திடவே சுண்ணமது வாகும்பாரு - குணமான கைபாகம் வரிசைதானே. (12)

தானென்ற கடுஞ்சுண்ணஞ் சீனச்சுண்ணந் - தாஷ்டிகமாய்ச் சல்லுரை யிதற்குள்ளாச்சு, வானென்ற முன்னேதான் பூத்துநின்ற வாலைரசந் தானெடுத்துப் பூத்தபூவை, நானென்ற சேரொன்று நிறுத்துக்கொண்டு - நலமான சீனமது சுண்ணம்சேராய், கோனென்று தானெடுத்து ரெண்டுமொன்றாய்க் - குணமாகக் கல்வத்திலிட்டுக்கேளே. (13)

இட்டுமே புகைநீராற் சாமமாட்டு - இதமாக வில்லைதட்டி ரவியிற்போடு, பட்டுமே காய்ந்தபின்பு பகரக்கேளு - பதிவாகக் கிடத்திலிட்டு மேலேமூடி, நட்டுமே மண்சீலை வலுக்கச்செய்து - நாடாமற் தீயெரிப்பாய் நாலுசாமம், கட்டுமே யிருந்திடுங்காண் அடியிலேதான் - கனிவாக வாலையென்ற சூதந்தானே. (14)

தானென்ற சூதமது வுயரயேறா தாஷ்டிகமா யிருந்துவிடும் அடியிலேதான், கோனென்ற குருவருளாம் பதத்தைப்போற்றிக் - குணமான சாதிலிங்கச் சுண்ணமாச்சு, வானென்ற யென்குருவாமகத்தியர்தானும் - வடிவாகச் சொல்லவில்லை வழக்காய்ச்சொன்னார்; நானென்ற ஆணவத்தால் வெளியிற்சொன்னேன் - நலமாக யிக்குருவை நயந்துகாணே. (15)

## லிங்கரச பற்பம்.

காணவே சாதிவெல்லந் தன்னிலேதான் - கால்களஞ்சி யிட்டு அந்தி சந்திகொண்டால், தோணவே நாளாறு வுண்டபோது - தடியான பத்தியங்க ளில்லையப்பா, வாணவே தீருகிற நோய்கள் தன்னை - வடிவாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு, ஆணவே பேதியொடு சோகைமாலை - அடைவாகச் சூசிகவாய் வதுவும்போமே. (16)

போகுமே மாலையொடு சோகைதீரும் - பொல்லாத பீலியொடு பிருமல்தீரும், ஆகுமே மூலமொடு கிராணிபோகும் - அடங்காத வரதமொடு பித்தம்போகும், பாகுபெற வலிகுன்மம் பித்தகுன்மம்-பாங்காகத் தொந்தமாங் குன்மம்போகும், வாகுபெற சிலேற்பனங்க ளெல்லாம்போகும் - வடிவான காயமது கற்றாணுமே. (17)

காமென்ற மகோதரங்க ளெல்லாம்போகும் - நடுக்குமே காமாலை பித்தப்பாண்டும், தாமென்ற கருமேகக் குஷ்டமெல்லாம் - தன் மையாம் பெருவயிறு யிரைப்புநீங்கும், வாமென்ற தலைவலியும் மண்டைக்குத்தும் - வடிவாகச் சொன்னரோ யனைத்தும்போகும், ஆமென்ற குருவருளாற் சொல்லிவிட்டேன்-அப்பனே குணமாகுங் கூர்ந்துபாரே. (18)

## லிங்கரச பற்பவேதை.

கூர்ந்துபார் முன்னேதான் பண்டிதத்தைக்-குணமாகப் பார்த்து நீ பின்னேதானும், வார்ந்துமே வாதமது செய்துதிரு - வடிவாக யிக்குருவைக் கொடுக்கும்பாகம், தேர்ந்துபார் கும்பிதனில் தைலச் செம்பு - திடமாகச் சொல்லிவிட்டேன் செம்புதன்னை, சார்ந்துமே பெடுத்துநீ வுருக்கிக்கொண்டு - சரியான வாலைகுருவொன்றுதாக்கே.

தாக்கிடவே மாத்தென்ன பத்துமாகுங் - தாஷ்டிகமா யுப்புக் குங் காவிக்கப்பா, வாக்கிடவே யோடாது வொளித்திடாது - வடிவாகக் கொண்டு ஜீவனத்தைப்பண்ணு, பாக்கியமாய்ச் செய்துநீ யோகம்பாரு - பதிவாகக் காயசித்தி பண்ணித்தேறு, தூக்கிடவே சொன்னசொல்லு தப்பாதப்பா - துடியாகச்சகலசித்துஞ் சித்தியாமே.

சித்தியாம் வாலைரசம் வைத்துநீயுஞ்-சிறப்பாகவோடாமற் சுண்ண மாக்கி, சத்தியாங் குளிகைதனைக் கட்டிக்கொண்டு - சரியாய்ஞான வழி யடுத்துக்கூடு, புத்தியாய் சாஸ்திரத்தைக் கூர்ந்துபாரு - பொருளான சகலசித்தும் ஆடலாகும், பத்தியாய் நினைவுதான் வைத்துத் தேர்ந்து - பதிந்துமனஞ் சாஸ்திரத்தின் பண்பைப்பாரே. (21)

பண்பாக வைத்தியர்க்கு யிதுவேயாதி - பகலிரவாய்க்கைபாகம் அறியவேணும், உண்பாரைப்பார்த்துநீ திரியவேண்டாம் - உற்றுமே சாஸ்திரத்தை நம்பிப்பாரு, கண்பார்வை யாகவே சூதந்தன்னைக் கனிவாகக் கட்டியே சுண்ணம்வைத்து, நண்பாக வுண்டுவர வியாதி போகும் - நலமாகப் பின்பெல்லாம் நயந்துபாரே. (22)

### வாலைரச மெழுகு.

பாருநீ வாலைரச மெழுகுதன்னைப் பண்பாகச் சொல்லுகிறேன் பரிந்துகேளு, காருநீ வாலைரசம் பலமும்ரெண்டு - கனிவாக நிறுத்துமே வைத்துக்கொண்டு, சாருமே வேப்பிலைதான் சேருநூறு சாட்சியாய்க் குறுகவே நறுக்கிக்கொண்டு, வாருமே பெரும்பாண் டத்துள்ளேயிட்டு - வடிவாக நல்லதண்ணீர் நிறையவாரே. (23)

வாரேநீ யடுப்பேற்றி யெரிநேர்பாகம்-வடிவாக யிலைசுவற வெரித்துக்கொண்டு, சீரேநீ செய்வாயே சொல்லக்கேளு - சிறப்பான கம்பிளியில் பிழிந்துகொண்டு, காரேநீ கிட்டிகட்டிப் பிழிந்துகொண்டு கனிவாக அடிகனத்த சட்டிதன்னில், பாரேநீ விட்டுநீ யடுப்பிவிட்டுப் - பதிவாக வாலையென்ற சூதம் விட்டே. (24)

விட்டுநீ பொங்காமல் பதமாகத்தான் - விதமாக யெரித்திடவே குழம்புபோலே, கட்டுமே யெரித்திட்டு வழித்துக்கொள்ளு - நல்மாகக் கல்வத்தி விட்டுத்தானும், மட்டுமே யிருசாமம் நன்று யாட்டு மயமாக வாலைரசம் மெழுகாய்நிற்கும், கட்டுமே மெழுகெடுத்துப் பலமும்பத்து – கனிவாக வாளமது வொன்றுதானே. (25)

மூன்றுருக் சுத்திசெய்து கூடச்சேர்த்து - உறவான பெருங்காயம் பலமுஞ்சேர்த்து, நன்றாகச் சிவந்தவேர் பலமுமொன்று - நலமாகச் சுக்கொன்று மிளகு மொன்று, வன்றாக யிவையெல்லாம்நிறுத்துக்கொண்டு - வகையாக ரசமெழுகோ டொக்கச்சேர்த்து, அன்றே நீயரைத்திடுவாய் சாமம்நாலு–அடைவாக அரைத்துநீ வழித்திடாயே

அரைத்துடனே வழித்ததையுஞ் சிமிழில்வைத்து - அடைவாக வயிரவர்க்குப் பூசைபண்ணி, பரைத்துடனே பரைதனக்கும் பூசை செய்து பதிவாக மெழுகெடுத்துப் பணந்தான்விதம், கரைத்துமே கொடுக்கின்ற வரிசைகேளு - கருவாகக் குன்றுமணிப் பிரமாணந் தான், உரைத்து நீ கொடுத்திடவே தேனில்தானும் - உற்பனமாய்த் தீருகிற கோயைக்கேளே. (27)

தீருகிற கோயென்ன சொல்லக்கேளு - திறமாகக் குன்மமுதல் வாதரோகம், பேருலகிற் பித்தமெல்லா மோடிப்போகும் - பேதமறும் ரசமெழுகைக் கண்டாயானால், காருகிற கடல்போலே கோய் கவர்ந்தும்-கருதினால் ரசமெழுகை யுண்டபோதே, ஆருமே யறியாது ஓடிப்போகும்–அண்டபகிரண்டமெல்லா மாடலாமே (28)

ஆடுமே வாலேரச மெழுகைக்கண்டால் - ஆடலாமொருகோடி வியாதிபோகும், கூடுமே கூட்டறிந்தால் சித்தியாச்சு - குணமாக அறியாட்டால் குணமொன்றில்லை, தேடுமே தேட்டமெல்லாம் ரசத் தின்லே-திடமான பற்பமெல்லாம் பாகத்தாலே, பாடுமே பாட்டெல்லாம் மார்க்கத்தாலே - பரிகாரம் பண்டிதத்தைப் பணிந்துபாரே.

பணிந்துபார் பெரியோர்கள் நூலைத்தானும் - பண்பாக மனம் பூண்டு பழக்கம்பண்ணு, நுணிந்துபார் முன்னூற்றை யறிந்துபாரு-நுனிவாகப் பண்டிதந்தான் நிலைத்துப்போகும், தணிந்துபார் சண்டாளர்க்கெய்தவாறு - தாஷ்டிகவான் கோடியிலே யொருவனுண்டு, பிணிந்துமார் பிணியறிந்து மருந்தை யீய்ந்தால் - பேர்சொல்லாப் பிணிகளெல்லாம் தீர்ந்துபோமே. (30)

தீர்ந்துபோம் வாலேரச மெழுகை வைத்துத் - திடமாக வுண்டிடவே ரோகமெல்லாம், கூர்ந்துமே கடல்புக்கும் வினைகளெல்லாங் குறியில்லா தோடிவிடுங் கருதிப்பாரு, ஓர்ந்துமே புளியுப்பைத் தள்ளிப்போடு - யுகமுடிந்து பலபிணிக ளோடிப்பேகும், சேர்ந்துமே கோயெல்லாந் தவுடுபொடியாகும் - சித்தர்கள் தம் சொல்மொழியை காட்டிப்பாரே. (31)

பாருமே நூலைவிட்டுப் பண்டிதத்தைப் - பார்த்தவைவார் பலனறிய மாட்டாரப்பா. காருமே கைபாகந் தன்னைவிட்டுக் - கருதாது பார்த்தவர்க்கு நரகமெய்தும், ஏருமே வுழுதாக்கால் பலனுமாகும் - இதமாகப் பண்டிதத்தைப் பாராமூடர், வேருமே யடிதொடுத்து யேற்லாகும்-வீணுகப் பார்த்தாக்கா லில்லைகாணே. (32)

காணவே சூதத்தை விட்டோர் கெட்டார்-காதலாய்த் திரிந்தோர்கள் உடல்கள் கெட்டார், பூணவே பண்டிதங்கள் புடபாகங்கள்-போக்கோடே செய்யாதார் மருந்துங்கெட்டு,ஆணவே செய்யாட்டால் வுயிர்கள் போச்சு - ஆகாகா யிச்சையினால் மனதுபோச்சு, காணவே மனங்குன்னி யேங்கியேங்கி-காடுநனி லலைவார்கள் வரதிதானே. (33)

வாதிமகன் வைத்தியனும் வடிவுமாகும் - வகையறியான் பண்டிதங்கள் செய்யமாட்டான், சாதியினல் பேசியே சுணங்கன்தானும்-தர்க்கமது பேசியே தெரிந்தாப்போலே, வேதியனுர் போலவே யுறவு பேசி - வேதாந்த சாஸ்திரத்தை மெத்தப்பேசி, கோதியே கிளிப்பிள்ளை போலேபேசிக் குணமாக வலைந்திடுவார் கோடிதானே. (34)

## உப்புக்கட்டு.

கோடிதர மலைபாம லுப்பைக்கட்டக் - குணமாகச் சொல்வேன் மூன்னூறு தன்னில், நாடியே கைபாகம் உப்பு மார்க்கம்- நலமாகக் கட்டுகிற மார்க்கங் கேளு, சாடியே கல்லுப்புப் படிதா னெட்டுச் சார்வாகக் கடல் தண்ணீர் முப்பத்திரண்டு, வாடியே யடிகனத்த - சட்டிதன்னில்-வகையாக விட்டுநீ காய்ச்சிடாயே. (35)

காச்சியே யகப்பையினால் கிண்டிக்கிண்டி - கனிவாக இதனைவடி கட்டிக்கொண்டு, வாச்சிடவே வொட்டயெரி யுப்புவெல்லாம் - வகையாக கெடியடக்கிக் கட்டிப்போகும், காச்சிடவே ஆண்பனைதான் காய்க்குங்காலம் - கனிவாகப் பெண்பனையாங் கருதிப்பாரு, ஏச்சிடவே யுப்பினு லெல்லா மாகும்-இனமாகும் நவலோகம் பழுக்கும்பாரே. (36)

பழுக்குமேஉப்பினுடவர்னங்கண்டால்-பாஷாணச்செம்பதுவுங் களிம்பு போகும், இழுக்குமே நவலோக மெல்லாந் தங்கம்-ஏழைமதி போகதே யின்னங் கேளு, நழுக்குமே காய்ச்சினதோ ருப்பு வாங்கி-நலமாக வுறுக்குகிற வரிசைகேளு, வழுக்குமே யுப்பதுவும் பலமு மெட்டு, வடிவாக வுண்டையாய்ப் பிடித்துக்கொள்ளே. (37)

கொள்ளவே யுண்டைமேல் கவசங் கேளு - கொடிதான் கடல் நுரையும் மேனிதானும், தள்ளவே சீனமொடு யிடையாய்ச் சேர்த்து -துடியாக அரைத்துநீ வுண்டைமேலே, தள்ளவே கவசமிட்டுக் காய வைத்துத் - தாஷ்டிகமாய் பத்தெருவிற் புடத்தைப் போடு, உள்ளபடி யிப்படியே ஐந்துதரம் போடு-உறுதியா யுப்பதுவுங் கட்டும்பாரே (38)

கட்டியதோ ருப்பதனை யெடுத்துக்கொண்டு - கல்வத்தி லிட்டுநீ கெகிழரைத்து, முட்டியே சூதமது பலமுமொன்றில் - முடிவாகக் கவசமது கட்டிநல்ல, இட்டமுட னிதின்மேலே கவசங்கேளு - இதமாகக் கடல்நுரையை யறைத்துக்கட்டிச் சட்டமுட னதின்மேல்மண் கவசங்கட்டிச் சரியாகப் புடமதுவைச் சாற்றக்கேளே. (39)

## உப்பு வேதை.

சாற்றக்கேள் பத்தெருவிற் புடத்தைப் போடு - சமுசயங்களில் லாதே யுப்புச்சாகும், ஏற்றிடவே வுப்பென்றால் யெளிதோ மக்காள் இதமாக வுப்பை விட்டா லெல்லாம் பாழாம், போற்றிடவே சகலருக் குங் குருவுந் தோணும் - பொருளாகக் கைபாகந் தோணுமப்பா, சாற்றிடவே பயிர்விளையும் சாத்தில் லாட்டால் - நலமாக வுலகமது தில்லாதாமே. (40)

ஆமேதான் செம்புருக்கி நூற்றுக்கொன்று-அணைத்திடவே நவ லோகம் யெல்லாம் யேமம், வாமேதா னுப்புக்குங் காவிக்கப்பா -வடி வாகத் தங்கமது மிறங்கும்பாரு, நாமேதான் வுப்பைவிட்டா லெல் லாம்பாழாம்-நலமாக வுப்பில்லாக் காரமெல்லாம், சாமேதான் வுப்பு க்குச் சாயமேற்று-சரியாகும் வுப்பினுட தன்மையாமே (41)

தன்மையாய் வுப்புச்செந் தூரங்கேளு - தாஷ்டிகமாய்க் கட்டி யதோ ருப்புதன்னை, நன்மையாய்ப் பலம்பத்து ரெண்டுதூக்கி- நலமு டனே பொற்றலையின் சாற்றாலாட்டி, வன்மையாய் நால்சாம மாட்டிக் கொண்டு-வடிவாக வில்லைதட்டிக் காயப்போடு, இன்மையாய்ப் பத்தெ ருவிற் புடத்தைப்போட்டு - இதமாக வெடுத்திடச் செந்தூரமாமே.

செந்தூரம் நவலோகம் நூற்றுக்கொன்று - சேர்த்திடவே பத் தரைதா னுணிக்கொக்கும், பந்தூ ராகவே மண்டலந்தான்-பதிவாக வுண்டிடவே தேகந்தானும், நந்தூரஞ் செவ்வலரிப் பூப்போலாகும் நலமாகப் பச்சைகரம் பிருக்கும்பாரு, வந்தூரம் விந்தூறும் வடிவாம் மெத்த - வகையாக யெல்லாமுஞ் சித்தியாமே. (43)

சித்தாவ தேதென்றாற் சொல்லக்கேளு- செயமாக வுப்பிலே கோடிவித்தை, முத்தியாய் வுப்பென்றால் யெளிதோமக்காள்-மோக முறும் உப்புக்குக் காரமேற்றி, நத்தியே நவலோகந் தன்னிலீய- நலமாக யெல்லாமுஞ் சித்தியாகும், பத்தியே வுப்பைமுந்திக் கட்டி ப்பாரு-பாலகனே வித்தையெல்லாஞ் சித்தியாமே. (44)

## கெந்தித் தைலம்.

சித்தியாம் பின்னமொரு சேதிகேளு-செப்புகிறேன் சித்தர்கள் தான் செப்பாதெல்லாம், புத்தியாய் கெந்தகத்தின் தைலந்தானும் புகலரியக் கெந்தகந்தான் சேருவொன்று, நத்தியே யண்டமது ஐம் பத்தொன்று-நலமாகச் சட்டிதனில் தண்ணீரூற்றி, முத்தியே வித்தி ட்டுப் பின்புகேளு-முடிவாக வண்டமெல்லா மெடுத்துக்கொள்ளே (45)

எடுத்துமே யண்டத்தை யுடைத்துநீயும்-இதமாக வெண்கரு வைத் தள்ளிப்போடு, அடுத்துமே மஞ்சளென்ற கருவைவாங்கு- அடைவாகச் சேரொன்று கெந்திபிட்டு, பத்துமே யிதுரெண்டுங் கல்வத்திட்டுப்-பதிவாக யிருசாம மாட்டிநன்றாய், விடுத்துமே பெரிய தொரு அடையாய்த்தட்டி-விதமாகச் செய்கின்ற நேர்மைகேளே.

கேளேநீ குப்பிக்குள் நிறையத்தானே-கெடியாக படைத்து நீ பின்புதானும், வாளேநீ குப்பிவாய் தன்னிலேதான்-வடிவாக மயிர் தருத்துப் பின்புநீதான், காளேநீ தொட்டியைத்தா னடுவில்பொ த்து-நயமாக குப்பியைத்தான் வைத்துநன்றாய், ஆளேநீ மண்ணி லிட்டு மோய்த்தானும்-அன்பாக அடுப்பேற்று மேலேதானே. (47)

## கெந்தகத் தைலப் பெருமை.

மேலேதான் புடமிட்டு யெரிக்கும்போது-மேன்மைபெற யடுப் புக்குள் பிங்கானிட்டு, காலேதான் புடமாறி யெடுத்தாயானால்-கனிவாகத் தைலமது மஞ்சள்போலாம், மாலேதான் மஞ்சளென்ற தைலந்தன்னை - மகமாக மண்டலந்தான் கொண்டாயானால், சேலே தான் குஷ்டமெல்லா மோடிப்போகுஞ்-செய்பாகக் கெந்தகத்தின் தைலந்தானே. (48)

## துருசு செம்பு

தானென்ற கெந்தகத்தின் தைலத்தாலே-தாஷ்டிகமாய் நவ லோகம் பழுக்கும்வேதை, ஊனென்ற பிந்தநூல் தன்னிலேதான்-உறுதியாய்ச் சொல்லுகிறேன் செம்புவேதை, வானென்ற துருசது தான் பலந்தான்நாலு-வடிவான சட்டிதனி லிட்டுக்கேளு, நானென்ற தீயெரித்துச் சாமம்நாலு-நலமாகப் பார்த்திடவே வெள்ளையாமே.

வெள்ளையாம் துருசுநீர் பலந்தான்ரெண்டு-விதமாகக் கெந்தியது மூவரையுமாகும், சள்ளையாம் சூடனது பலமுரெண்டு-சார்வான வீரமது பலமுங்கால்தான், கொள்ளையா மிதுநாலுங் கல்வத்திட்டு-கொடிதான பழச்சாற்றிற் சாமம்நாலு, உள்ளையாந் தானரைத்து வுண்டைசெய்து-உறுதிபெறக் காயவைத்து வுண்மைகேளே (50)

கேளப்பா வதின்மேலே கவசங்கேளு-கெடியான சுண்ணாம்பும் உப்பும்நோய், ஆளப்பா யரைத்ததின்மேற் கவசம் பண்ணு-அதின் மேலே மண்ணரைத்துக் கவசம் செய்து, மாளப்பா புடமிட்டுப் பார்த்தாயானால் - மாசற்ற செந்தூர மாகும்பாரு, தேளப்பா கொட்டு தல்போ லிந்தமார்க்கம்-தெவிட்டாது துருசினுட மார்க்கந்தானே (51)

மார்க்கமென்ன பின்புநீ செய்யக்கேளு-மதிமயங்கிப் போகாதே யப்பாகேளு, தீர்க்கமென்ன வெடியுப்புத் திராவகத்தைச் சீர்பெறவே யிட்டுநன்றாய் வைத்துக்கொண்டு, ஏர்க்கமென்ன அரபொடியும் பலமு மொன்று-எலுமிச்சம் பழச்சாற்று லூறவைத்து,கார்க்கமென்ன தெளி விறுத்து வைத்துக்கொண்டு-கனிவாக முன்மருந்தை யரைத்திடாயே

அறைத்துமே வில்லைதட்டிக் காய்ந்தபின்பு-அகலிலிட்டுமேல இலால் மூடிக்கேளு, முறைத்துமே மூன்றெருவிற் புடத்தைப் போடு-முக்கியமா யாறவிட் டெடுத்துக்கொண்டு, குறைத்துமே குகையிலிட்டு வுருக்கித்திரு-குணமான செம்பாகுங் கூர்ந்து பாரு வுறைத்துநீ செம்பெடுத்துக் கரியில்வைத்து- வகையாக வூதிகன் றுய் வைத்துக்கொள்ளே. (53)

## இரும்புருக்கும் விதம்

கொள்ளவே யர பொடியும் பலந்தான் நாலு – கொள்கியதோர் கெந்தியது பலமும்நாலு, மள்ளவே யிதுரெண்டுங் கல்வத்திட்டு-மய னமா யிஞ்சாம மரைத்துத்திரு கள்ளவே குகையிலிட்டு வுருக்குகன் றுய்-கனமான மணியாகுங் கண்டுகொள்ளு, தெள்ளவே மணி யெடு த்து வைத்துக்கொண்டு-திறமாகச் செய்தொழிலைச் சொல்லக்கேளே.

கேளேநீ முன்செம்பு பலமும்நாலு - கெடியாகப் பலமொன்று வுருக்கிரும்பு, தாளேநீ தங்கமது பலமுமொன்று - தாஷ்டிகமாய் மூன்றுமொன்று யுருக்கிக்கொண்டு, நாளேபாழ் போகாமற் களங்க மாகும்-நவிலரிது களங்கினுட பெருமை மெத்த, சாளேநீ வெள்ளி யது பலந்தானென்று-சமர்த்தாகக் காரீயஞ் சமமாய்க்கூட்டே (55)

கூட்டியே யோட்டிவிட்டு வூதிப்போடு -குணமாகக் கசடகற்றி தகடுதட்டி, வாட்டியே வுப்பிரண்டு செங்கல்லொன்று - வடிவாகக் கல்வத்திலிட்டரைத்து, நாட்டியே வட்டதனிற் புடத்தைப்போடு- கலமாக வெள்ளியதை மேலேவைத்து, மூட்டியே மூவெருபுடை த்தைப்போடு -முக்கியமா யெடுத்துப்பார் முறையதாமே. (56)

## களங்கின் வேதை

முறையாகச் சேர்க்கின்ற பாகங்கேளு- முற்றுபெற வெள்ளி தான் நாலுமாகும், குறையிலாக் களங்கமது வொன்றுமாகும்-குண மாக யிதுமூன்று முருகித்தானும், உறையாகப் பார்த்திடவே பத்து மாற்று - உயர்வாக வுப்புக்குங் காவிக்கேகா, நிறையாகத் தாயை விட்ட பாவத்தாலே-நிஷ்டூர மாகுமிது வாதந்தானே. (57)

வாதமது நிலைக்கவே சொல்லக்கேளு -வடிவான தங்கமது சாக வேணும், சூதமது தங்கத்திற் சேர்க்கவேணும்- சுகமான தங்கமது வெளிதிலாகும், காதமது நடந்தானோர் வழியுந்தானுங் –காதலாய்த் துலையுமது கருதிப்பாரு,வேதமதை படித்தாலே ஞானமாகும்-வித மாக யெல்லாமுஞ் சித்தியாமே. (58)

சித்தியாந் தங்கத்தால் வேதைகோடி-செப்பரிய சூதத்தால்வேதை கோடி, புத்தியினால் வாதசித்தி யுடனேயாகும்-புகலரிய தைலத்தால் வேதைகோடி, சத்தியே கெந்தியினால் வித்தைகோடி-நாடாத வாத வித்தை களினமாகும், சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் முந்நூறு தன்னில் - சகலசித்து நிலைக்குமது தாக்கிப்பாரே. (59)

## செம்பு வேதை

தாக்கிடவே யின்னமொன்று சாற்றக்கேளு சாதகமாய்ச்சொல் லுகிறேன் கையின்பாகம், வாங்கிடவே செம்பதுவுஞ் சேருமொன்று-வடிவாகத் தகடாகத் தட்டிக்கொண்டு, நோக்கிடவே கல்லுப்புச்சேரு யெட்டு-நுண்மையாய்ச் செங்கல்மா ஞலுசேரு, ஆக்கிட்டவேரெண்டு மொன்ருய் நெகிழரைத்து-அடவாக வரட்டிதனிற் பரப்பிவையே.(60)

பரப்பியே செம்பென்ற தகடுவைத்துப்- பதிவாக யெருவடுக் கிப் புடமும்போடு, காப்பியே புடமாறி யெடுத்துத் தானே-கனிவாக வெங்கலத்தின் சட்டிதன்னில், மரப்பியே தண்ணீர்ரை நிறையவிட் டுப்-பாங்காகப் பிரட்டியெடு பண்பதாக, உரப்பியே யலசியெடு யதி னைத்தானும்-உண்மையாய் மண்ணில்லா தெடுத்திடாயே. (61)

எடுத்துநீ யதுவெல்லாங் காயப்போடு-இதமாகக் காய்ந்தபின்பு யின்னங்கேளு, வடுத்துமே கெந்தியென்ற தைலந்தன்னை-வடிவாக அதின்மேலே யிட்டுமேதான், கடுத்துமே மூன்றுநா ளூரவைத்துக்-கனிவாக வேயரைத்துப் பில்லைசெய்து, கடுத்துமே காயவைத்து புடத்தைப்போடு- நன்மையாய்ச் சிவந்து நிற்குஞ் செம்புதானே (62)

தானென்று சிவந்துநின்ற செந்தூரத்தை-தாஷ்டிகமாய் நோ க்காரங்கூட்டி, வானென்று மிதையரைத்துக் குகையில்வைத்து வடிவாக யுருக்கிடவே செம்புமாகும், நானென்ற செம்புதனில் நா லுக்கொன்று- நலமாகத் தங்கமது சேர்த்துருக்கி, கானென்ற தக டாகத் தட்டிக்கொண்டு -கனிவாகக் கெந்தியது முக்கால்சேரே. (63)

சேர்த்துநீ வீரமது காலுங்கூட்டிச்-சிறப்பாகத் தகடுக்கு மேலும் பூசி, பார்த்துநீ புடம்போடு நொறுங்கமட்டும் - பறிவாகப்போட்டு யெடு கருத்துப்போகும், கார்த்துமே மயங்காதே வெள்ளி தன்னிற் -கனிவாக காலுக்கு வொன்றுகூட்டி, நார்த்துமே யுருக்கிப்பார்மாத் துக்காணும் நலமாகப் பத்தாகும் நயந்துபாரே. (64)

## செம்புச்செந்தூர வேதை.

நயந்துபார் செந்தூரஞ் செய்யக்கேளு - நலமாகத் திராவகத்தா லரைத்தரைத்து, பயந்துமே போகாதே புடத்தைப்போடு-பதிவாயிப் படிப்பந்துமுறையே போடு,நயந்துமேசெந்தூரம் முருக்கம்பூப்போல் - க்ரியமாய்த் தானிருக்குஞ் செந்தூரந்தான், முயந்துமேசெந்தூரம் நூற்றுக்கொன்று - மூட்டுவாய் நவலோகந்தன்னிற்கேளே. (65)

கேளுமே யிருபத்தி யைந்துமாத்து - கெடியாக வர்ணமது பச்சையாகும், ஆளுமே யிதுதனையே தணிக்கக்கேளு - அடைவாகச் செம்புதனை வைத்துருக்கி, நாளுமே பார்த்திடவே மாத்துத்தானும் - நலமாகத் தணியுமது தங்கமாகும், வாளுமே தங்கத்தை வைத்துக் கொண்டு - வளமாக ஜீவனத்தைப் பண்ணிடாயே. (66)

புண்ணிடவே யோகமொடு ஞானம்பாரு -பதிவாகச் சுழிமுனையில் நாட்டம்பாரு, உண்ணிடவே மண்டலத்திற் காயச்சித்தி - உறவான வாதமது வெண்பதுந்தான், தண்ணிடவே யோடுமது கடலேபுக்கும் தாஷ்டிகமாய்ச் சிலேற்பனங்க ளோடிப்போகும், கண்ணிடவே கள்ளிப்பால் கறந்தாப்போல - கனிவாகச் சித்திதருங் கண்டுபாரே.

கண்டுபா ரயச்செம்பைக் கண்டபோதே - கனிவாக யெல்லாமுஞ் சித்தியாகும், உண்டிடவே மனமதுவு மகிழ்ச்சியாகும் - உறுதியிது நல்லவித்தை யுற்றுப்பாரு, கொண்டிடவே சித்தரிடங் கூடிவாழ்வீர் - குணமாக யெல்லாமுஞ் சித்திமெத்த, பண்டிடவே சித்தியெல்லாம் பண்புமாகும் - பார்ப்பவர்க்கு வெகுசுளுவு பண்புதானே. (68)

பண்பாக யின்னமொரு சேதிகேளு - பதிவாக ஞானகற்ப யோகமாகும், கண்பாக நாகரசத் தைலந்தன்னைக்- கனிவாகச் செய்திடவே யுலகத்தோர்க்கு, நண்பாக நவலோகம் பழுக்கும் வேதை - நாட்டியே கைபாக வரிசைநேர்மை, உண்பாரை யுடுப்பாரைப் பார்த்து யேங்கி - உறவழிந்து போகாதே வாதம்பாரே. (69)

வாதமென்றால் கொஞ்சத்திற் கிடைக்குமோசொல் - மகத்தான யோகிமுதல் ரிஷிகள் சித்தர், நீதமென்ற பஞ்சகர்த்தா ளிவர்கட்கெல்லாம்- நிறைநிறையாய்ப் பார்த்திடினும் தப்பிப் போகும், வேதமென்ற ஐந்தாம்வே தத்துக் கொக்கும் - விரைந்துமனோன் மணித்தாயார் சொல்லக்கேட்டு, பாதமென்ற பாதத்தைச் சிரசில் வைத்துப் -பரிவாக நாகரச கெந்திப்பாரே. (70)

## நாகரச கெந்தித் தைலம்

நாகரச கெந்தியென்ற குருவைத்தானும்- நாதாக்க ளொளித்திட்ட குருவைக்கேளு, தாகமதாய்க் கைபாகவரிசைகேளு-தாஷ்டிகமாய் நாகமது பலமுமொன்று, யோகமாய் நாகத்தின் சுத்திகேளு - ஒத்துமே யிலுப்ப நெய் தன்னிலப்பா, பாகமாய் பத்துவிசை யுருக்கிச் சாய்க்கப்- பண்பாக வூரலற்றுக் கட்டும்பாரே. (71)

கட்டியதோர் நாகத்தைக் கரண்டியிட்டுக்- கனலிட்டு யுருக்கியே கருணையாகத், திட்டமுடன் ரசந்தன்னை யதிலே வாரு - தீவிரமாய் ரசத்தையுமே நாகமுண்ணும், பட்டிகமாய்த் தவளையதைப்பாம்புதானும் - பதிவாக முழுங்கினது போல்முழுங்கும், அட்டியில்லை அய்யர் சொன்ன கைபாகத்தை-அன்பாகச் சொல்லுகிறேன் அறிந்துகாணே.

அறிந்துமே யிந்தயிடை கெந்திசேர்த்து - அப்பனே யதைவிட்டுச் சாமமூன்று, கறிந்துமே யரைத்ததனை வில்லைசெய்து - கனமான ரவிதனிலே யுலரப்போடு, பறிந்துமே யுலர்ந்தபின்பு சொல்லக்கேளு- பண்பாக யெருவடிக்கிப் புடத்தைப் போடு, நறிந்துமே தயிலமது யிறங்கும்பாரு-நலமாகத் தைலத்தை யெடுத்துக் கொள்ளே. (73)

## மாற்றுயர

தயிலத்தை யெடுத்துமே சொல்லக்கேளு-தயவாக மதிதனிலே யிந்தாற்கேளு, அயிலமெல்லாங் கொடுத்தாலுந் தைலவேலை-ஆச்சரியங் கெந்தகத்தின் போக்குமெத்த, தைலந்திற் றணிந்த பொன்னை தைலத்திற் றேய்த்து-தாஷ்டிகமாய்ப் புடம்போட்டு வுருக்கிப்பாரு, வயிலமாய் மாத்துத்தான் பத்துமாகும்-வடிவாகக் கைபாக மாகச்செய்யே.

## கருவங்கச் செந்தூரம்

செய்யவே யின்னமொரு களங்குகேளு-செப்புகிறேன் உலகத்திற்சொல்லா நீதி, வையவே காரீயஞ் சேர்தானென்று - நலமாகச் சுத்திபண்ணிக் குகையிலிட்டு, மெய்யவே யுருகையிலே யிடைதான் கேளு-மேன்மைபெறக் கெவுரிதனை யீய்ந்திட்டாக்கால், பையவே நொறுங்கியது தூளுமாகும்-பதிவாக அயச்சட்டி தன்னிலிட்டே. (75)

இட்டுமே கல்லுப்புச் சேர்தானென்று-இதமாகக் கொடுத்துவறு பயமில்லாமல், கட்டுமே யிருசாமம் வறுத்தபின்பு-கருவாகக் கற்றாழைப் பாலாலாட்டி, வட்டுமே பெரியபுடம் போட்டுத்தீரு-வடிவாகச் செந்தூர முருக்கம் பூப்போல், நட்டுமே யிருந்துவிடும் நாலத்தொன்று - நலமாக வங்கசெந் தூரந்தானே. (76)

தானென்ற செந்தூரந் தன்னிலேதான்-தாஷ்டிகமாய்த் தாளகமுஞ் சூதஞ்சேரு, வானென்ற புகைநீரா லரைத்துக்கொண்டு-வடிவாகக் காய்ஷவத்து வண்மையாக, நானென்ற அகலிலிட்டுப் புடத்தைப் போடு-நலமாகச் செந்தூர முருக்கம் பூப்போல், கானென்ற யிருக் குமது செம்பு நூற்றிற்-கனிவாகவொன்றிடவே கனகமாமே. (77)

கனகமாம் வங்கத்தைக் கண்டபோதே-காதலுடன் செல்வங்கள் மெத்தவுண்டு, வனகமாம் வங்கமென்ற ராஜா வாலே-வடிவான சகலகுரு வழியுமாகும், உனகமாம் வாதமெல்லா மேதினிலே-உறுதி மிக வுண்டாகும் வுற்றுப்பாரு, தனகமாம் வழலையெல்லாம் வங்கத் தாலே-தாஷ்டிகமா யெல்லாமுஞ் சித்திகாணே. (78)

## உப்பின்பெருமை.

காணவே யுப்பைமுந்திக் கட்டிப்பாரு-கனகமா யாவதிற்குக் கருத்துவேணும், பூணவே யுப்பாலே யெல்லாமாச்சு-புகலறிய வுப்புக் குக் காரமேற்றி, தோணவே யுப்பென்றால் பெரிதேயல்லால்-துரித முட னுப்பதுவுங் கட்டிற்றானால், பாணவே வங்கத்தை முந்திக்கட்டு- பகலிரவு தோற்றுமந்த வாட்டமாமே. (79)

வாட்டமாய்க் கைபாக மாகச்செய்தால்-வடிவாகுங் களங்காகுங் குருவுமாகும், பூட்டறியப் பூட்டெல்லாம் உப்பினாலே-புகலரிய கட் டுவகை யுப்பினாலே, தேட்டமா யுப்பைவிட்டோர் கெட்டாரப்பா- இஜகஜால மாவதற்கு யுப்பைக்கட்டு, நாட்டவே உப்பெல்லாங் கரு மத்தாலே-நாட்டினால் சித்திக்கும் உப்புதானே. (80)

தானென்ற வுப்புக்குக் காரமேற்று-தாஷ்டிகமாய் வயிற்றுவலி குன்மம்போகும், மானென்ற வரிசையாய்ச் செய்து கொண்டு-வடி வான சரக்கெல்லா மிறுகிக்கட்டும், கானென்ற பூதத்தைக் கண்டுதா னுங்-கனிவாகப் பார்த்தல்லோ செய்துகொண்டு, நானென்ற வானு வத்தைத் தள்ளிப்போடு-நலமாக வாதவித்தை கண்டுதேறே. (81)

கண்டுகண்டு தேறியே மனதைக்கட்டு-கனிவாக யெல்லாமுஞ் சித்தியாகும், பண்டுவிட்ட குருவாலே வருவதாகும்-பதிவாக வாத மென்றால் வெளிதிலாமோ, முண்டுவிட்டுக் கைபாக மாகச்செய்து முனைந்துநீ பார்த்தாக்கால் தெரியுமப்பா, வண்டுபோ லலையாதே நூலைப்பாரு-மயங்காதே யறிவுகுரு வாகும்பாரே. (82)

## தங்கவுறம்

ஆகுமே தங்கவுறஞ் சொல்லக்கேளு - ஆச்சரியம் யிதுவாகு முன்னேபாரு, வாகுபெறத் தங்கவுறங் கண்டபோதே – வலுவான நோய்களெல்லா மாண்டுபோகும், பாகுபெற நோயெல்லாம் தீவிடு பொடியாகப் – பண்பாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு, தாகு பெறத் தங்கம்போல் வைத்துக்கொள்ளு - தாஷ்டிகமா யிம்முறையை வைத்திடாயே. (83)

வைத்திடவே யின்னமொரு சேதிகேளு-வடிவாகவெள்ளீயஞ் சுத்திசெய்ய, கைத்திடவே கரண்டிதனி லுறுக்கிக்கொண்டு - கனி வாக வெள்ளாட்டு யமுரிதன்னில், நைத்திடவே யேழுதரா முறிக்கிச் சாய்க்க - நல்லசுத்தி யாயிருக்கும் நயந்துபாரு, பைத்திடவே சுத்தி செய்த யீயந்தன்னைப்-பதிவாகப் பலவாறு நிறுத்துக்கொள்ளே. (84)

கொள்ளவே கரண்டிதனி லுறுகும்போது- குணமாக யெண் ணெய்குத்திக் குளகுளக்க, துள்ளவே சூதமது பலமும்மாறு - துடிவாக யுறுகும்போ திரதம்வாறு, விள்ளவே ரெண்டுவொன்று யுறுகிசிற் கும் - விதமாக யாறவிட் டெடுத்துக்கொள்ளு, தள்ளாமற் கல்வத்தி லிட்டுடைத்துத்–தாஷ்டிகமாய்ப் பிட்டாகுஞ் சார்ந்துபாரே. (85)

பாருநீ கெந்தகந்தான் பலமுமாறு-பதிவாகச் சீனமது பலமு மாறு, காருநீ சாரமது பலமுமாறு–கனிவாக யிதுவைந்து நிறுத்துக் கொண்டு, தாருநீ வாய்நீரை விட்டுக்கொண்டு - சாதகமாய்ச் சாமமது வரைத்துநீயும், சாருநீ காய வைத்துப் பின்பு தானுஞ் - சரியுற கைபாக வரிசைகேளே. (86)

வரிசையா மறைப்புட்டி குப்பிதன்னில்-வாகாக வடைத்து நீ பின்புகேளு, உரிசையாய்க் கோணிதான் சவுக்கமாக-உகந்துமே வலு வாகச் சீலைசெய்து, நரிசையாய்க் காயவைத்து சட்டியொன்று - நல மாக நடுவிலே பொதிந்துகொண்டு, கரிசையாய்க் குப்பிதனை நடுவி லிட்டுக் - கனிவாக நாலுவிர லடியிற்றுனே. (87)

தானென்ற வடிதனிலே தெரியச்செய்து - தாஷ்டிகமா யுள்ளே தான் மணலையிட்டு, வானென்ற குப்பிவாய் தெரியவிட்டு - வடிவாக நால்சாமம் கமலம்போலே, கானென்ற தீயிட்டுச் சிலாக்கையாலே- கனிவாகக் குத்தியே யெரித்துப்பாரு, நானென்ற வடுப்பாற்றிப் பிரி த்துத்தானும்-நலமாக மெள்ளவே யெடுத்திடாயே. (88)

## வெள்ளி வுறம்

எடுத்திட்வே குப்பிதான் நொறங்கிப்போகும்-ஏழைமதி போகாதே யெடுத்துப்பாரு, அடுத்துமே தங்கம்போல் நிறமுமாகும்-அன்பாகத் தங்கவரப் பொடிபோற் காணும், தடுத்துநீ சீனத்தைத் தள்ளிமைந்தா சரக்குத்தான் நாலுநீ சேர்த்தரைத்து, விடுத்துநீ முன்போலே யெரித்துப்பார்த்தால் -விதமாக வெள்ளியரப்பொடிபோலாமோ. 89

## தாதுவுறு லேகியம்.

ஆமேதான் தாதுவுட குணத்தைக்கேளு-அன்பாகச் சாதிக்காய் லேகியத்தை, வாமேதான் சாதிக்காய் பலமுமொன்று-வடிவான பத்திரியும் கிராம்புயேலம், காமேதான் கோஷ்டமொடு வால்மிளகு-கனிவான கசகசா மதுரந்தானும், நாமேதான் வகைக்கொன்று பலம் நிறுத்து-நலமாக யிளவருப்புச் செய்திடாயே. (90)

செய்திட்டுப் பின்புதான் சொல்லக்கேளு-ஜெயமாகப் பசுவின் பால் படிதானென்றில், பைத்திட்டுச் சட்டியில்விட் டடுப்பி லேற்றிப் பண்பாகத் தீயெரிப்பாய் கமலமாக, நைதிட்டு யெரித்திடவே சர்க்கரையைவிட்டு-நலமாகப் பதமாகக் காய்ச்சிக்கொண்டு, வைதிடவே முன்மருந்தைத் தூவிக்கொண்டு-வளமாக யாவின்நெய் யதனிலூற்றே

ஊற்றியே லேகியமாய்ப் பண்ணிக்கொண்டு-உண்மையாய்ப் பாக்களவு அந்திசந்தி, நாற்றிசையு மெய்க்கவே சொல்லக்கேளு-நலமாகத் தங்கவுறம் பணந்தான் விதம், சாற்றியே மண்டலந்தா னுண்ணும் போது-சரீரத்தி லுள்ளநோய் தவறுண்டேபோம், மாற்றியே மன்மதன்போற் றேகமாகும்-மயமான விந்திறுகும் வடிவதாமே (92)

ஆமேதா னனுபோகம் செய்யும்போது-அடைவான விந்துதான் கீழ்காடாது, தாமேதான் பெண்களெல்லாம் மயங்கிப் போவார் - தயவாகத் தங்கவுற முண்டாதாலே, வாமேதான் பத்தியத்தைச் சொல்லக்கேளு- வடிவாகப் பாலன்னம் புசித்துத்திரு, காமேதான் பச்சை நரம் பிடுங்கிக்காணும்-கனிவாக நோய்களெல்லா மோடிப்போமே. (93)

ஓடுமே தங்கவுறங் கண்டபோதே - ஓதரிய குஷ்டமுதல் கருங்குஷ்டந்தான், காடுமே யிதைவைத்து ஜீவனத்தை-நலமாகச் செய்திடவே சகலசித்தி, கூடுமே கைபாக மாகச்செய்து-கூடுதற்கு முன்னே தான் குணமாய்வைத்து, தேடுநீ நவலோகந் தன்னிலீயத் - திடமான மூத்தென்ன பத்துமாமே. (94)

ஆமேதான் தங்கவுறந் தன்னைக்கண்டால் - அடைவான நோயெல்லா மோடிப்போகும், வாமேதான் தங்கவுறம் வைத்தபின்பு - வாதாடும் வைத்தியத்தில் வலுமைமெத்த, தாமேதான் பார்த்திடவே ஜீவனத்தைத்-தாஷ்டிகமாய்ச் செய்திடவே பின்புநீயும், காமேதான் பஞ்சபூதத்தைக்காணு-கனிவாகப் பார்த்திடவே சித்தியாமே. (95)

## பஞ்சலோகச் செந்தூரம்

ஆமேதான் பஞ்சபூ தத்தைத் தானும் - அன்பாகக் கைவரிசையாகச்சொல்வேன், தாமேதான் மாத்தெல்லாம் பஞ்சபூதர்-தாஷ்டிகமாயிதைவைத்து நவலோகத்தில், காமேதான் கொடுத்திடவே மாற்றுமாகும்-கனிவான பூதத்தி ,லொன்றுதப்பில், வாமேதான் பலபலவாய் வாதங்காணும்—வடிவான வாதமது பிசகுந்தானே. (96)

தானென்ற வாதத்தை விட்டாயானால்-தரணிதனில் நாய்போல பெண்ணைச்சார்ந்து, ஊனென்ற காயமது நிற்காதப்பா-உறுதியாய்க் காயமது நிற்கவேண்டில், வானென்ற பஞ்சபூதத்தைச்செய்து-வடிவாகச் செந்தூரம் வைத்துக்கொண்டு, கானென்று வுண்டிடவே காயந்தானும்-கனிவாக யுகவரைதா னிருத்துந்தானே. (97)

## தங்கம்

இருத்துமே பஞ்சலோகத்தைகேளு- இதமாகத் தங்கமது பலமுமொன்று, கருத்துமே காய்ச்சியே தகடுதட்டிக்- கனிவாகக் கல்காவி பழச்சாறுவிட்டு, நருத்துமே யரைத்துநீ தகட்டின்மேலே-நலமாகக் காய்ச்சிமுன்னே தடவியேதான், உருத்தியே யேழுதரந் தோய்த்திட்டாக்கால்-உறவாகச் சுத்தியாந் தங்கந்தானே. (98)

## காரீயம்

தங்கமாந் தங்கத்தைக் சுத்திசெய்து-தாஷ்டிகமாய் விபரமினிச் சாற்றக்கேளு, துங்கமாங் காரீயம் பலமுமொன்று- துடியாகக் கத்தாழம் பாலால்சுத்தி, பங்கமா யேழுதர முருக்கிச் சாய்த்துப் - பதிவாகச் சுத்திபண்ணிப் பின்புகேளு, சங்கமாய்க் கரண்டிதனில் வைத்துருக்கிச் சத்தியமாஞ் சூதமதை யதனிலூற்றே. (99)

ஊற்றியே நல்லெண்ணெய் கொஞ்சங்குத்தி - உறுதியா யாரவைத்துப் பின்புகேளு, நாற்றிசையு மெய்க்கவே யாரவிட்டு-நலமாக யெடுத்துநீ கழுவிப்போட்டு, வாற்றியே கல்வத்திலிட்டுக்கேளு-வளமான கெந்தியரைப் பலமேயிட்டு, காற்றியே புகைநீரா லரைத்துச் சாமம் - கனிவாக வில்லைதட்டிக் காயப்போடே. (100)

## செய்பு

காயவே வைத்தபின்பு பாகங்கேளு-கனிவாக யகலிலிட்டு மேலே மூடி, நாயகமாய் மண்ணரைத்துச் சீலைசெய்து - நலமாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு, மாயவே யெடுத்துநீ தூரவைத்து-மயமாகப் பின்பொன்று சொல்லக்கேளு, தாயவே செம்பதுவும் பலமுமொன்று-தான்காய்ச்சித் தகடாகத் தட்டிக்கொள்ளே. (101)

தட்டியே ருவியதைக் கல்வத்திட்டுத்-தாஷ்டிகமாய் லிங்கமரைப் பலந்தான்கூட்டி, வட்டியே புகைநீரற் சாமமாட்டி -வடிவாக வில்லை தட்டிக்காயப்போடு, கட்டியே யகலிலிட்டுப் புடமுந்நீரு - நலமாகச் சிறிதாகப் யோட்டுத்தானும், கட்டியே யெடுத்துநீ தூரவைத்துக் - கருத்தாகப் பின்புதான் கருதக்கேளே. (102)

## இருப்பு

கருதவே யிரும்பதுவும் பலமுமொன்று-கனிவாகக் கெவுரியது பலமுமொன்று, வருதவே ரெண்டும்நீ நிறுத்துக்கொண்டு-வடிவான கல்வத்திலிட்டுக்கொண்டு, கருதுமே புகைநீரை விட்டுஆட்டி-நலமாகக் குகையிலிட்டு வுருக்கினுக்கால், கருதவே யுருகியே மணிபோலாகும்-நலமான வெள்ளிமணி போலேயாமே. (103)

## நாகம்

ஆமேதா னுருகினதோ ரயத்தைத்தானும் - நலமாகத் தூரவைத்துப் பின்புகேளு, காமேதா னாகமது பலந்தானென்று-கலங்காமவிலுப்பெண்ணெய் தன்னிற்றானும், நாமேதா னுருக்கியே கரண்டிதன்னில்-நலமாகச் சூதத்தைப் பாதிவிட்டு, வாமேதான் நல்லெண்ணெய் கொஞ்சங்குத்த - வளமாகப் புட்டாகு மெடுத்துக்கொள்ளே.

## துருசி செந்தூரச் செம்பு.

ஏடுத்துமே தாளகமும் பாதிசேர்த்து-இதமாகப் புகைநீரை விட்டரைத்து, நடுத்துமே வில்லைதட்டிக் காயப்போடு-நலமாகக் காய்ந்தபின்பு நாட்டக்கேளு, அடுத்துமே யகலிலிட்டுப் புடத்தைப் போடு - அடைவாக வாறினபின் னெடுத்துப்பாரு, கடுத்துமே சேர்க்குகிற வரிசைகேளு-கனிவாகத் துரிசியது சேருவொன்றே. (105)

ஒன்றாகச் சீனமது சேருவொன்று-உறுதியா யண்டோடு சேருவொன்று, நன்றாகக் கல்வத்திலிட்டுத்தானும் - நலமாக வெண்கருவாலரைத்துமைபோல், வன்றாக வரைத்துநீ வில்லைதட்டி-வளமாகப் பெரியபுடம் போட்டுத்தீரு, கன்றாகக் கல்வத்தி விட்டுத்தானும் - கனிவாகயரைத்துநீ துருசிமேலே. (106)

மேலாகக் கட்டியே பின்புகேளு-மேன்மைபெற மேற்கவசம் கட்டித்தானும், காலான பெரியபுடம் போட்டுத்தீரு-கனிவாகவதைப் பிரித்துப் பார்த்தாயானல், காலான செந்தூரம் போலிருக்கும் - நல மான குகைதனிலே வைத்துருக்க, சேலாக வுருகியது நல்லசெம் பாஞ்-ஜெகசாலவித்தைக்குத் திறமாம்பாரே. (107)

## பஞ்சலோகக்களங்கும் வேதையும்.

பாருநீ செம்புதான் பலமும்நாலு-பதிவாகத் தங்கமொன்று மூன்னேதாக்கு, சாருநீ பின்னேதான் காரீயத்தைச் - சாதகமா யுரு கையிலே கிராசமிட்டு, வருநீ பின்னேதான் லிங்கம்தாக்கு-இதமாக யதன்பின்னே யயத்தைத்தாக்கு, வாருநீ யதன்பின்னே நாகந்தாக்கு - வடிவாக ஐந்துதர முருக்கிப்பாரே' (108)

உருகுமே ஐந்துந்தான் உருக்கிப்பாரு-உறுதிமிகக் குருவா கும் வெள்ளிதன்னில், கருகுமே யெட்டுக்கு ரெண்டு தீக்கு-நல மாக ஊதிவிட் டெடுத்துக்கேளு பெருகுமே யெட்டேகால் மாத்துக் காணும் - பிசகாது உப்புக்குங் காவிக்கப்பா, கருகியே போகாது கைபாகத்தைக் - கருவாகச் சொல்லுகிறேன் கண்டுபாரே. (109)

பாருமே யிதைவைத்து ஜீவனத்தைம் - பக்குவமாய்ப் பார்த்துநீ பின்புகேளு, வாருமே வாசியோ கத்தைப்பாரு - வடிவாக ஞானவழி யெடுத்துக்காட்டும், ஏருமே வுழுதாலே வாதமாகும்-ஏரில்லா னுகந் தடித்த கதைபோலாகும், சாருமே யொன்றைவிட் டொன்று செய் தால்-சரியில்லா தலைவார்கள் வாதிதானே. (110)

தானென்ற களங்கத்தைச் செந்தூரிக்கத் - தாஷ்டிகமா யிது லதுவு முன்னேபாரு, வானென்ற களங்கமதைப் பலம்நிறுத்து-வடி வாகக் கெந்தியது நாலத் தொன்று, கானென்ற வீரமது நாலத் தொன்று - கனிவாகக் கல்வத்தி விதனையிட்டு, நானென்ற புகை நீரால் ஜாமமாட்டி-நலமாக வில்லைதட்டிக் காயப்போடே. (111)

போட்டுநீ யகலிலிட்டுப் புடத்தைப்போடு-பொலிவாகத் தீயா ற்றி யெடுத்துப்பாரு, காட்டுநீ செந்தூர முருக்கம் பூப்போல்-கனி வாக யிருக்குமது நவலோகத்தில், நாட்டுமே நூற்றுக்கு வொன்று தாக்கு.நலமாகப் பத்தரைதான் மாற்றுக்காணும், வாட்டுமே வுப்பு க்கும் காவிக்கேகா-வளமாக வுண்டிடவே நாட்டங்கேளே. (112)

## பஞ்சலோகச் செந்தூரத்திற்கு தீரும் வியாதி.

நாட்டமா யக்திசந்தி யுண்ணும்போது-நலமாக நரைதிரைக ளற்றுப் போகும், வாட்டமாய் ரோயெல்லாந் தவிடுபொடியாகும் - வடிவாக வாதமது தீர்ந்துபோகும், கூட்டவே பித்தமது போகுமப்பா-கூர்ந்துபார் பலபிணியுங் குடிகெட்டோடும், மூட்டுமே மகோதரமு மோடிப்போகும்-மூதண்டக் கூடமெல்லாம் முடிவுதானே. (113)

தானென்ற நூல்தனிலே நாதாக்கள் சொன்னார் - தாஷ்டிகமாய் நவலோகம் வேதையாக, வானென்ற முந்நூற்றில் வெளியாய்ச் சொன்னேன்-வடிவாக யிந்தநூல் தன்னைப்பாரு, கானென்ற கைபாகம் வெளியாய்ச் சொன்னேன் - கடினமென்று போகாதே கருதிப் பாரு, நானென்ற வாணவத்தால் வெளியாய்ச் சொன்னேன் - நலமாகச் சொன்னதெல்லாம் சித்தியாமே. (114)

சித்திடாம் நாதாக்க ளேதுசெய்வார்-சிறப்பாகக் கைபாக மாகச் செய்வார், புத்தியாய்க் கைபாக யினமறிந்து-புனிதமாய்ச் செந்தூரஞ் செய்துகொள்வார், நத்தியே பாகமதைக் கண்டபோதே-நலமாக நூல்மர்மந் தெரியலாகும், புத்தியுடன் நூல்மர்மந் தெரிந்தபோதே-பகலிரவாய் ஞானம்வந்து நிலைக்கும்பாரே. (115)

### சூதக்கட்டு

பாருநீ சூதத்தைக் கட்டில்வேதை-பகரரியப் பொன்னாகும் வேதை யாகும், காருநீசெம்புதனைக் களிம்பெடுக்கக்-கனிவாகக் களிம்புதான் போகுமப்பா, வாருநீ கட்டாகும் மெழுகுமாகும்-வடிவாக யெல்லாமுஞ் சித்தியாகும், சேருநீ சூதத்தைக் கட்டக்கேளு-சிறப்பாகக் கட்டுதற்கு வகையைக்கேளே. (116)

கேளுமே சூதமது கட்டக்கேளு - கெடியாகத் துருசு சூதத்தைக் கொல்லும், வாளுமே லச்சையென்று மயங்கவேண்டாம்-வடிவாகத் துருசதுவும் பலமும்ரெண்டு, நாளுமே [illegible] தன்னைத்தானே -நன்றாகத் தான்வெளுக்கத் தேய்த்த[illegible] சாளுமே வெள்ளையாய்த் தேய்த்துத் தேய்த்துச்-சரியாக அலம்பியே சொல்லக்கேளே. (117)

சொல்லக்கேள் துரிசதனைப் பொடித்துக்கொண்டு-ச[illegible]ரைப் பழச்சாறு நிறையவிட்டு, கல்லிலே சூதமது பலமு மொன்று - கனிவாகக் கரண்டிதனில் விட்டுப்பின்பு, நல்லவே மூன்றுநாளாத் தானும்-நலமாக வைத்துப்பின் னெடுத்துக்கொண்டு, மல்லவே கல்வத்தி லிட்டுநீயும்-மயமாகக் கழுவியே தண்ணீர்வாரே. (118)

TAMILNADU ARCHIVES LIBRARY
No. 101662
MADRAS

வார்த்துடனேநன்றாகக் கழுவிக்கொண்டு-வடிவாக அட்டைபோவி
ருக்கும்பாரு, கார்த்துமே துணியிலிட்டுப் பிழிந்திட் டாக்கால் -கனி
வாகக் கட்டியா யிருக்குமப்பா, நார்த்துமே கட்டியிருகினதைத்
தானும்-நலமாக வுண்டையா யுருட்டிக்கொண்டு, பார்த்துமே குளிர்
ந்த தண்ணீர்க் குள்ளேயிட்டு-பரிவாக மூன்றுநாள் போட்டுவைய்யே.

## சூதக்கட்டுப்பு மார்க்கம்.

போட்டுமே மூன்றுநாள் கழித்தபின்பு-புகழாக யெடுத்துநீ
சொல்லக்கேளு, நாட்டுமே கல்லுப்புப் பலமும் நாலு - நலமாகக்
கல்வத்தி லிட்டரைத்து, வாட்டுமே யுண்டைக்குக் கவசங்கட்டி-
வடிவாகக் காயவைத்துப் பின்புகேளு, மூட்டவே கடல்நுரைதான்
சேருவொன்று-முனிவாக மேனியிலே கால்தானுமே. (120)

ஆமேதா னிதையரைத்து வுண்டைமேலே - அடைவாகக் கட்
டியே காயவைத்து, காமேதான் பத்தெருவிற் புடத்தைப்போடு-
நலமாக யாறினபின் னெடுத்துநீயும், வாமேதான் கவசத்தைப் பிரித்
துப்பாரு - வளமாகக் கடல்நுரையைத் தள்ளிப்போட்டு, தாமேதா
னுப்புரச மெடுத்துக்கொண்டு - தயவாக வைத்திடவே நல்லதாமே.

## சூதகட்டுப்புக்கு வேதை.

நல்லதுதான் செம்புதனில் பத்துக்கொன்று நலமாகக் கொடுத்
துருக்கி யெடுத்துக்கொண்டு, கல்லதுதா னதையுடைத்து வெள்ளி
யெட்டில்—கனிவாக வொன்றுதான் கொடுத்துருக்க, வல்லதுதான் பார்
த்திட்டவே மாத்துயெட்டு—வாகாக வுப்புக்கும் காவிக்கோடா, சல்லாபு
மாகவே புடமிறங்குஞ்-சரியாக யிதைமுன்னேவைத்திடாயே. (122)

வைத்துநீ யிந்தவுப்பைத் தின்றுயானால்-வடிவான நரை திரைக
ளோடிப்போகும், கைத்துநீ போகாதே யுப்பைத் தின்றால்-கனிவாக
யெல்லாமுஞ் சித்திமெத்த, வித்திலே விளைந்ததொரு பாகமாகும் -
விதமாகும் நவலோகம் மேன்மையாகும், சத்தியமாய் நோய்க
ளறுங் காணுமோடுஞ் - சரியான பொருளாகுஞ் சார்ந்துபாரே. (123)

பாருநீ முன்னேதா னுப்பைப்பாரு-பதிவான வுப்பதுதா
னெளிதோ மக்காள், ஆருமே சொல்லார்க ளுப்பு மார்க்கம்-அடை
வான கைபாகம் நேர்மைமெத்த, கோருமே கருவைத்தா னறியவே
ணுங்-குணமான வுப்பிலே யெல்லாமாகும், வாருமே வுப்பில்லாக்
கருமயெல்லாம்-வழும்பாச்சி யாதிவுப்பு வாண்மைகேளே. (124)

ஆண்மையாம் உப்படங்கிக் கட்டினாக்கால்-அறுபத்து நாலுசித்தி யாடலாகும், வாண்மையாம் வாதமது யேவல்கேழ்க்கும் - வடிவாக யோகமது சித்தியாகும், தாண்மையாம் வுப்பிலே யெல்லா மாச்சு-தாஷ்டிகமா யுப்பை விட்டா லெல்லாம் போச்சு, பாண்மையா மாத் தெல்லா முப்பினாலே-பறந்தோடுங் கெவுனமது உப்பாலாச்சே. (125)

ஆச்சப்பா வுப்பைவிட்டால் ருசியோபோச்சு-ஆடுகிற காலுக்கு வுறுதிபோச்சு, பாச்சப்பா யப்பைவிட்டுஉப்பைக்கட்டி-யாடலா மொருகோடி வித்தைதானாம், காச்சுப்பை விட்டிலுப்புஞ் சிவந்து தானால் - ஸ்கவசமா மொருகோடி வித்தையப்பா, சூச்சிதமாய்ச் சொல்லவில்லை யுப்பின்போக்கு-சுகநயமா யெல்லாமு மறிந்திடாயே.

## அயச்செய்பு.

அறிந்திடவே பின்னமொரு சேதிகேளு-ஆதியா மயச்செம்பு சொல்லக்கேளு; பறிந்திடவே அயப்பொடியும் பலமோபத்து பரிவான பழச்சாற்றி லூறவைத்து, நறிந்திடவே மூன்றுநாள் சென்றபின்பு - நலமாக வதையலம்பி நாட்டக்கேளு, வறிந்திடவே துரிசியது சேர்தானென்று-வடிவாகக் கெந்தியது முக்கால்சேரே.

சேர்த்துநீ மூன்றுமொன்று யரைத்துக்கொண்டு-சிறப்பான பழச்சாறு கூடவிட்டு, பார்த்துமே யரைத்தவுண்டை பண்ணிநீயும்-பதிவாகக் காயவைத்துப் பின்புகேளு, கார்த்துநீ வுப்புடனே சுன்ன மிட்டு - தனிவாக வுண்டைக்குக் கவசங்கட்டி, வார்த்துமே மண்கவச மேலேகட்டி - வளமாகப் பத்தெருவிற் புடத்தைப் போடே .(128)

போட்டுமே யெடுத்துப்பார் கருப்பாய் நிற்கும்-புகலாதே குகையிலிட்டுக் காரங்கூட்டி, காட்டுநீ யுருக்கிடவே சத்துமாகுங்-காரணமாய்ச் சத்தெடுத்துக் காரங்கூட்டி, வாட்டுநீ காரத்தைப் பாதிகூட்டி-வடிவாக யிருசாம மரைத்துப்பில்லை, நாட்டுமே காய வைத்துப் புடத்தைப்போடு-நலமாகக் குகையிலிட் டுருக்கிடாயே

உருக்கிடவே சத்தாகுஞ் சத்துதன்னை-உறுதியாய் வெண்காரம் பாதி சேர்த்து, நரிக்கிடவே பழச்சாற்று லரைநால்சாமம் - நலமாக வில்லைதட்டிக் காயப்போடு, பெரிக்கிடவே பெரியபுடம் போட்டுத் தீரு - பேசாதே குகையிலிட்டு வுருக்கு நன்றாய், நெருக்கிடவே யிப்ப டிக்குத் - தாமுமஞ்சு-நேராக வுருக்கிடவே சத்துமாமே. (130)

ஆமேதான் சத்துதான் வெள்ளையாகும்-அடைவான சத்துதனைப் பிரிக்கக்கேளு, நாமேதான் வீரமது ஒன்றுகூட்டி-நலமாகப் பழச் சாற்றுலரைத்து நன்றாய், சாமேதான் பார்த்திடவே மஞ்சள் போலாஞ் சரியாகக் கிடத்திலிட்டு யெரித்துப்போடு, வாமேதான் வீரமது வுயரயேறும்-வடிவாக யடியில் நிற்கும் மருந்துதானே. (131)

## அயசெம்பு வேதை

மருந்தெடுத்துக் காரத்தைக் கூட்டி நீயும் - வடிவாகக் குகையி லிட்டு வுருக்கித்திரு, கருந்தாதே சிகப்பாகுஞ் சிகப்புமெத்த-காசினியி லிச்செம்பு நல்லதாகும், வருந்தாதே வெள்ளிதனிற் கொடுத்தாயானால் -வடிவாக மாத்தேழு காணுங்காணும், அருந்தவே வுப்புக்குங் காவிக்கோ-ஆண்மையா யிதைவிற்று ஜீவனமேசெய்யே. (132)

## அயசெம்பு களங்குவேதை

செய்யவே அயச்செம்பு வெள்ளிதன்னில்-திறமாகக் கொடுத் திடவே மாத்துயெட்டு, பையவே அயச்செம்பைக் கண்டபோதே பதிவாகக் கலியெல்லாம் பறந்துபோகும், மெய்யவே அயச்செம்பு பலமும்நாலு-மேன்மையாந் தங்கமது பலமும்நாலு, நையவே ரெண்டு மொன்று யுருக்கிநல்ல-நலமாகத் தகடுதட்டி நாட்டக்கேளே. (133)

நாட்டமாய் நாலுக்கு ஒன்று கெந்தி-நலமாக வீரமது காலதாகும், கூட்டமா யிதுரெண்டு மரைத்துமேலே-குணமாகத் தடவியே புடத் தைப்போடு, வாட்டவே தகடதுவும் நொறுங்கிப் போகும்-வடிவாக வெள்ளிதனில் நாலுக்கொன்று, ஊட்டவே கொடுத்துருக்கு மாற்றும் பத்து-உறுதியாய் வாதமிதில் ஒழுங்குமாமே. (134)

ஒழுங்காகும் அயச்செம்பைக் கண்டபோதே - உறுதியாய்வாசி யோகத்தைப் பாரு, அழுங்கவே முன்னேதான் அயத்தைப்பாரு - அடைவாகச் செந்தூரம் பண்ணியுண்ணு - நழுங்கவே அயத்தினுட மேனியாகும் - நலமான கருவாகும் நாடிப்பாரு வழங்கவே மன மொன்றாய்க் கூடும்பாரு-வளமான பொருளாகும் நாடிப்பாரே. (135)

நாடிப்பார் முன்னேதா னயத்தின்செம்பை-நலமாக வைத்துநீ வேலைசெய்து, கூடிப்பார் கூட்டுமுறை கண்டவாதி-குணமாக யெல் லாமுஞ் செயமுமாகும், வாட்டியே கெந்தகத்தால் வர்ணமெத்த-வடி வாகத் தாளகத்தால்வர்ணமெத்த, கூட்டியே கூட்டறிந்து கொடுத் துப்பாரு-குணமாக யெல்லாந்தான் கூர்ந்துபாரே. (136)

கூர்ந்துமே பஞ்சபூ தத்தைக்கண்டு-குறிப்பான நேர்மைகண்டு சேர்வைகண்டு, ஆர்ந்துமே தங்கமில்லா வாதமில்லை - அரிதரிது தங்கத்தை யறியாவிட்டால், வார்ந்துமே கெந்தியில்லாச் செந்தூரந்தான் - வடிவுமிக வாகாது வலுச்செய்யாது, மார்ந்துநீ பாயில்லாக்கப்பல்போலே - மயமாக வோடாது மார்க்கமாமே (137)

மார்க்கமாம் யோக முத்தர் வாக்கியத்தால் - வடிவாக வாதங்கள் வருகும்பாரு, தீர்க்கமில்லாப் படுபாவி தனக்குத் தானும் - திடமாக வொன்றுமில்லை திட்டம்பாரு, ஏர்க்கவே சுடுவாதி தனக்குமில்லை - இதமான பண்டிதமு மில்லைகண்டாய், கார்க்கவே கைபாகந் தனையுங் கண்டோர் - கருணையுள்ள புத்தியுள்ளோர் கருதுவாரே. (138)

## நாகக் கட்டு.

கருதியே நாகமது கட்டக்கேளு-கனிவாக நாகமது பலமு மெட்டு, நருதியே நாகமது சுத்திகேளு-நலமாக யிலுப்பெண்ணெய் தனிலுருக்கி, வருதியே யேழுதரஞ் சாய்த்துப்பின்பு - வடிவாகச் சுத்தியாம் வர்ணமெத்த, பருதியே தானுருக்கி வட்டாய் சாய்த்து-வடிவாகப் புகைநீரை யொன்று கேளே. (139)

## புகை நீர்

கேளுமே வெடியுப்புப் பலமும்பத்து-கெடியான சீனமது யிரு பத்தைந்து, வாளுமே ரெண்டு மொன்று யிடித்துப் பின்பு - வடிவாக வாலையென்ற சட்டியிட்டு, நாளுமே தீயெரிக்க வெள்ளை நீராம் - நலமாக வெள்ளையைத்தான் தள்ளிப்போடு, தாளுமே மஞ்சளைத்தான் பிடித்துக்கொண்டு-தகுதியுள்ள சீசாவி லடைத்துக்கொள்ளே. (140)

## வெடியுப்புச் சுன்னம்

அடைத்துமே பின்பதுவும் வொன்றுகேளு-அடைவாக வெடியுப்புச் சுன்னங்கேளு, நடைத்துமே வெடியுப்புப் பலமும் பத்து நலமாகப் பழம்புளியும் பலமுமைந்து, படைத்துமே ரெண்டுமொன்று யிடித்துக்கொண்டு - பதிவாகப் புதுச்சட்டி தன்னிலிட்டு, முடைத்துமே தீயெரிக்கச் சுன்னமாகு-முணர்வாகச் சுன்னமது பலமுமொன்றே. (141)

ஒன்றாக நிறுத்துமே புகைநீர் தன்னில் - உறுதியாய்ப் போட்டிடவே புகைந்துபத்தும், நன்றாகப் பந்தினதோர் புகைநீர் தன்னில்-நலமாகச் சிவந்துசல மாகும்பாரு, கன்றுத யிச்சலத்தில் வீரம்போட்டுக்- கனிவாகப் பார்த்திடவே காரம்ரெம்ப, பன்றாகப் பீங்கானி லிறுத்துக்கொண்டு- பலமாக முன்னுகந் தன்னில்தானே.

தானென்ற நாகத்தை யுருக்கிச்சாய்க்கத் - தாஷ்டிகமாய்ப் புகை யடக்கிக் கட்டிப்போகும், வானென்ற நாகத்தை வில்லைவார்த்து-வடிவாக வதின்மேலே கவசங்கேளு, கோனென்ற வளகிளுப்பிப யரைத்துக்கட்டி-குணமாகக் காயவைத்துப் பின்புகேளு, நானென்ற மண்சீலை வலுவாய்ச்செய்து-நாடியே பெரியபுடம் போட்டிடாயே.

போட்டுநீ யெடுத்துப்பார் தங்கம்போலே-பொலிவாகக் கண்ணடங்கி நிற்கும்பாரு, காட்டுமே நல்லகட்டு முழுக்கட்டப்பா-நாடியே கட்டெல்லா முப்பினாலே, காட்டுமே உப்பைவிட்டால் வர்ணம் போச்சு-நலமாக வுப்பைமுந்திக் கட்டிப்பாரு, மூட்டுமே உப்பில்லாக் கட்டுபெல்லாம்-முதலாகப் பார்த்திடவே சித்தியாமே.

## நாகக்களங்கு வேதை.

சித்தியாம் நாகத்தை யுருக்கிக்கொண்டு-சிறப்பாகத் தங்கமது யிடையேசேர்த்து, புத்தியா யுருக்கியே தகடுகட்டிப்-போக்கோடே யிரதமது யிடையேசேர்த்து, சுத்தியே யரைத்திடவே சூதந்தானும்-நலமாக மயினம்போ லாகும்பாரு, பத்தியா- யிருசாம மாட்டிப் பின்பு-பதிவாகக் காயவைத்துப் பின்புகேளே. (145)

கேளுநீ கிடத்திலிட்டு மேலேமூடிக்-கெட்டியாய்ச் சீலைமண் வலுக்கச்செய்து, ஆளுநீ வாலையென்ற வடுப்பிலிட்டு - அடைவாக யிருசாம மெரித்துப்பாரு, காளுமே செந்தூர முருக்கம்பூப்போல்-கலமாக யிருந்துவிடுஞ் செந்தூரந்தான், பாளுமே போகாது செந்தூரந்தான்-பதிவாக நவலோகம் நூற்றுக்கொன்றே. (146)

ஒன்றாக நூற்றுக்கு வொன் றுதானே-ஒழுங்காக விட்டிடவே மாத்துப்பத்து, நன்றாக உப்புடனே யிரங்கிப்போகும்-நாட்டிலே செந்தூரம் கிட்டாதப்பா, வன்றாகச் செந்தூரம் குன்றியுண்ண-வடிவாக வாதயெண் பதுதானப்பா, கன்றாகப் பித்தமது யெல்லாம்போகுங்-கனிவாகச் சித்திதருங் கணக்குமாமே. (147)

## நாகச்செந்தூரத்தால் தீரும்வியாதி.

ஆமேதான் மகோதரமும் மாலைபோகும்-அடைவான காயமது கல்தானாகும், நாமேதான் பவுந்திரங்க ளண்டவாதம் - நலமாக விரைவாத மெல்லாம் போகும், பாமேதான் குடல்வாதம் நீர்கள் போகும் -பதிவாகப் பயித்தியமு மயக்கம்போகும், தாமேதான் பவுந்திரங்கள் காமாலைபோகும் சாக்ஷியா யிவையெல்லாஞ் சித்தியாமே. (148)

சித்தியாங் காமாலை பித்தவெட்டை-தீராத சூலைபதி னெட்டும் போகும், புத்தியாய்ப் பொல்லாத நோய்களெல்லாம்- புகலரிய புண் புரைகள் லிங்கப்புத்தும், நத்தியே மதுமேகம் ஆம்பல்கட்டி-நலமான நீர்க்கட்டு நாடாதோடும், சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் கைபா கத்தைத்-தாஷ்டிகமாய்ப் பார்த்திடவே தருணமாமே. (149)

தருணமாம் ரசவாதம் யோகவாதம்-தாஷ்டிகமாய்ப் பார்த்தறிந் தால் தன்மையாகும், வருணமாம் நூலறிந்தால் வாதமாச்சு-வடிவாக யறியாட்டால் வாதம்போச்சு, கருணமாய் ஞானமெல்லா மேதா லாச்சு-கருத்தறிந்த பெரியோரைக் கண்டுபாரு, வருணமாய் நம் பியே பார்த்தாயானல்-வடிவாகுஞ் சித்திதரும் வண்மைதானே.

## நீலகண்ட செந்தூரம்.

தானென்ற நீலகண்ட செந்தூரத்தைத்-தாஷ்டிகமாய்ச் சொல்லு கிறேன் பிரக்கமாக, வானென்ற நவலோக மெல்லாம் யேமம்-வடிவாக யறிந்தவனே சித்தயோகி, நானென்ற ஆணவத்தை விட்டோன் வாதி-நலமாக நூலறிந்தோன் நல்லசித்தன், கோனென்ற-குருவறிந் தோன் ஞானியாவான் - குறிப்பாக யறியாதான் குணமில்லானே.

குணமாக நீலகண்ட வாலைதன்னைக்- கொடிதாகச் சொல்லுகி றேன் கூர்ந்துகேளு, மணமாகக் கைபாக வரிசைகேளு, மார்க்கமாய்ச் சொல்லுகிறேன் பாரின்மீது இனமாக வுப்பாலே யெல்லாமாச்சு- வாகாக வுப்பைவிட்டா ருனுத்தமாண்பர், கனமாக முப்பூவாமிந்தப் போக்கு-காதலா யறிந்தவனே வாதியெண்ணே. (152)

## திராவகம்.

வாதியாஞ் சொல்லுகிறே னுற்றுக்கேளு-வடிவான வெடியுப்பு அஞ்சாங்காய்ச்சல், நீதியாம் பலம்பத்து நிறுத்துக்கொண்டு-நேரான சீனமது யிருபத்தைந்து கோதியாம் ரெண்டுமொன்று யிடித்துக் கொண்டு-குணமாக வாலையென்ற சட்டியிட்டு, நீதியாயெரித் திடவே வெள்ளைநீரை-நேராகத் தள்ளியே பின்னீர்வாங்கே. (153)

## ரசபற்பம்.

வாங்கியே மஞ்சள்நிறம் வருகுமக்காள்.வடிவான மஞ்சளென்ற நீருதன்னை, தாங்கியே பிடித்துநீ வைத்துக்கொண்டு, தாஷ்டிகமாய் வாலைரசஞ் சேருவொன்று, பாங்கியே கல்வத்தி லிட்டுநீயும் பதி வாகப் புகைநீரை யதிலேவாரு, தூங்கியே திரியாதே ரவியில் வைத்தால் - தப்புறவாய்ப் பூத்திருக்கும் நேர்மை தானே. (154)

தானென்ற பூவெடுத்து வைத்துக்கொண்டு, தாஷ்டிகமாய் சூதத்திற் புகைநீர்குத்தி, வானென்று வைத்திடவே பூத்திருக்கும்-வடிவாக யிப்படிக்கு பூவையெல்லாம், கானென்று யெடுத்தடனே வைத்துக்கொண்டு-கனிவாகப் பாகமாய்க் கண்டுபாரு, தேனென்று சிவகாமி சொல்லக்கேட்டுத்-திடமாக முப்பூவைச் சொல்வேன்பாரே.

துருசு நீறு

பாருநீ துருசதுவுஞ் சேர்தானென்று-பதிவாக வதைப்பொடித்துச் சட்டியிட்டு, காருமே தீயெரிக்கச் சாமம்நாலு - கனிவாகக் கொக்குநிறம் போலேயாகும், சாருமே யதையெடுத்துக், தூரவைத்துச்-சரியாக யரப்பொடிதான் சேர்தானென்று, வாருமே கல்வத்திலிட்டுக்கேளு-வடிவான வீரமது பாதிசேரே. (156)

சேர்த்துநீ புகைநீரால் நெகிழவாட்டிச்- செம்மையுடன் வில்லை தட்டிக் காயப்போட்டு, பார்த்துநீ யகலிலிட்டுப் புடத்தைப் போடு-பதிவாகத் தீயாற்றி யெடுத்துப்பாரு, வார்த்துநீ சிவந்திருக்கும் முருக்கம்பூப்போல்-வடிவாசப் பலம்நாலு நிறுத்துக்கொண்டு, சாத்துவேன் பூத்திருக்குஞ் சூதந்தானுஞ் சரியாகச் சேர்த்து நீ துருசுநீறே.

நீருக பூன்று மொன்று யிடையே சேர்த்து - நேராகப் புகை நீரை விட்டு ஆட்டி, ஆருக யரைத்துப்பார் சிவந்துநிற்கும் - அடைவாகப் பசுக்காது முருக்கம்பூவாம், காருக யிருசாம மரைத்து நன்றுய்க்-கனிவாக வில்லைதட்டிக் காயப்போடு, நாருகக் காய்ந்தபின்பு கிடத்திலிட்டு-நலமாக மேல்மூடிச் சீலைசெய்யே. (158)

சீலைசெய்து காயவைத்துச் சொல்லக்கேளு-செயமாகச் சட்டிதான் பெரிதாய்வாங்கி, ஆலையாம் நடுவிலே பொதிந்துதானே-அடைவாகக் கிடமதுவை யிட்டு வுள்ளே, வாலையா யுள்ளேதான் மணலையிட்டு-வடிவாகத் தீயெரிப்பாய் சாமம்பத்து, காலையா யெரியிட்டுப் பிரித்துப் பார்த்தால்-கண்கொள்ளாச் செந்தூர மாகுந்தானே. (159)

தானுகக் கொஞ்சமது வுயரயேறித் - தனியாக யிருந்திடுமே சார்ந்துபாரு, வானுக யதைவழித்து அடியில் நிற்கும்-வடிவான செந்தூரந் தன்னைச்சேர்த்து, நானுகப் புகைநீரை விட்டுஆட்டி-நலமாக மூன்போலே வில்லைதட்டி, தேனுக ரவிதனிலே காயவைத்துத்-திடமாக மூன்போலே கிடத்திலிட்டே. (160)

இட்டுமே தியெரிப்பாய் பத்துச்சாமம்-இதமாக வாரியபின் னெடுத்திடாய்நீ, கட்டுநீ பார்த்தாலே கனங்கொள்ளாது-கனி வர்ன செந்தூர முருக்கன்பூவாம், பட்டுநீ கைபாக மிந்தப்போக்கு-பதிவாக விதியாளிக் கெப்துமப்பா, நட்டுநீ வைத்தாலே யிந்தப் போக்கு-நலமாக வினையுமது நாடிப்பாரே. (161)

நாடியே வயிரவர்க்குப் பூசைசெய்து-நலமாகச் செந்தூரந் தன்னையெடுத்து கூடியே கும்பிதனில் தைலச்செம்பு-கூறினேன் முந்நூற்றுக் கொன்றுதாக்கு, வாடியே மாத்தென்ன பத்துமாகும் வடிவான மகாதுண் டலங்கள்பண்ணி, தேடியே யிதைக்காணப் போற்றுமாண்பர்-செகத்திலே கிடையாது செந்தூரந்தானே. (162)

## நீலகண்ட செந்தூர வேதை.

தானென்ற செந்தூரம் நவலோகத்தில்-தாஷ்டிகமாய்ப் பார்த் திடவே மாத்துப்பத்து, வானென்ற சாஸ்திரத்தில் நாதாக்கள் சொன்ன-மறைப்பெல்லாம் பாடிவிட்டே னுலகுதன்னில் நானெ ன்ற வாணவத்தாற் செந்தூரத்தை-நாடியே சொல்லிவிட்டேன் நல்லவாக்காம், கோனென்ற குருவருளைப் போற்றித்தானே-குண மான சித்திதரும் கூர்ந்துபாரே. (163)

## நீலகண்டசெந்தூரத்தால் தீரும் வியாதி

பாருநீ அந்திசந்தி வெல்லந்தன்னில்-பண்பாக வுண்டிட்டவே மண்டலத்தில், காருநீ நரைதிரைக ளற்றுப்போகும்-கனிவான பித்தமறும் கண்டுபாரு, சேருநீ வாதமது யெண்பத்துநாலுஞ்-சிறப்பாக வோடிவிடுந் திறமைமெத்த, வாருநீ பித்தத்தா லெடுத்த ரோகம்-வடிவாக வோடிவிடும் வண்மைதானே. (164)

தானென்ற சிலேற்பனங்கள் தொண்ணூற்றுந்-தாஷ்டிகமா யோடிவிடுந் தாக்கிப்பாரு, வானென்ற மூலமுதல் கிராணியெல் லாம்-வடிவாக வோடிவிடும் வழக்கமப்பா, தேனென்ற க்ஷயத்தி லெழும் வியாதியெல்லாந்-திறமாகுங் குணமாகுஞ் சிறப்புமெத்த, நானென்ற விந்திறுகும் பசுமைமெத்த-நாடாது யென்வசனம் பொய்போகாதே. (165)

போகாத கர்மமெல்லாம் போகும்பாரு-புகழ்பெரிய ஞான மது மிகவுண்டாகும், வாகாகப் பெரியோரைத் தொண்டுபண்ணி-வடிவாக யெல்லாமுஞ் சித்தியாகும், ஆகாத கர்மமெல்லா மோடிப் போகும்-ஆச்சரியந் தேகமது காந்தியாகும், தாகமாய்ச் செந் தூர முன்னேசெய்து-தயவாக வுண்டுநீ தாக்கிப்பாரே. (166)

பாருநீ சித்தரெல்லாங் கூட்டங்கூடிப், பதிவாக வழலையென் றும் பூநீரென்றும், தாருநீ சவுக்காரச்சுன்னமென்றுந்- தடைபடவே முப்பூவை மறைத்தாரப்பா, சாருநீ மறைப்பை யெல்லா முந்நூறு தன்னில் - சாக்ஷியாய்ச் செந்தூர வடிவுசொன்னேன், காருநீ யிந் நூலை யாராய்ந்து பார்த்து-கருத்துறவே பார்த்தாக்கால் சித்தியாமே.

சித்திபெற வேண்டுமென்றாற் செந்தூரம் பண்ணு-செப்பரிய சூதத்தைப் பூர்க்கப்பண்ணு, முத்தியாய் அயத்தைநீ செந்தூரித்து-முடிவாகச் சேர்த்தாக்கால் செந்தூரமாகும், பத்தியாய் நவலோக மெட்டுக்கோடும் - பகலிரவாய் ஞானவழி யெடுத்துக்கூறு, நத்தி யே திரிந்துநீ சாஸ்திரத்தை-நலமாகப் பார்த்தாக்கால் சித்தனுமே.

சித்தரா யாவதற்கு முறைமைகேளு - சித்தநிலே புத்தியால் முப்புப்பாரு, நத்தியே மோக்ஷத்துக் கிடமேபாரு-நலமாக யெல் லாமுஞ் சித்தியாகும், வித்திலே விளைந்தாப்போல் ஞானமாகும்-வேதாந்தஞ் சித்தாந்தம் ரெண்டுமொன்று, சத்தியமாய்ச் சொல்லி விட்டேன் செந்தூரத்தைச் சரியாக வைத்துநீ சார்வுபாரே (169)

## உபரிபாண்டுச் சுன்னம்.

சார்வாக உபரிபாண்டுச் சுன்னங்கேளு- சமுசயங்களெண்ணுதே சார்ந்துபாரு,பார்வாகக் கடலினுரை சேர்தானென்று பதிவாகச் சுத்தி முறை பண்புகேளு, மார்வாகச் சொல்லுகிறேன் சுண்ணும்பாகும் வகையாக வுவர்மண்ணைக் கரைத்துக்கொண்டு, தாவாகத்தண்ணீரை விட்டுத்தானே தகுதியாய்க் கடல்நுரையைப் போட்டிடாயே.

போட்டுநீ குமுறயெரி வொட்டக்காய்ச்சிப்-புகழாக யதை யலம்பிக் கல்வத்திட்டு, கூட்டியே கல்லுப்பு யிடையேசேர்த்து-குணமாக வரைத்துமே பொடியதாக்கி. மூட்டியே யடுப்பிலிட்டுத் தீயைமூட்டி-முனையாக காயுருகிக் கொழுந்தினுலே, காட்டிநீ யிரு சாமம் வறுத்தாயானல் நலமாகச் சுன்னமது வாகும்பாரே. (171)

## உபரிபாண்டு சுன்னச்செயநீர்.

ஆகுமே கல்லுப்புச் சுன்னந்தானும் அடைவாகக் கடுஞ்சுன்ன மாகும்பாரு, வாகுமே கல்லுப்புக் கொடிய சுன்னம் - வடிவாக யிச் சுன்னங் காலன்காலன், பாகுபெறச் சுன்னத்துக் கிதுவேயாதி பதி வாகச் சுன்னமிடை சாரஞ்சேர்த்து, சாகுமே யிருசாம மரைத்த பின்பு—சாக்ஷியா யடைபிடித்து வைத்திடாயே. ..(172)

வைத்துமே புடம்போட்டு யெடுத்துப்பாரு வடிவாகப் பனியில்லவைக்கச் செயநீராகும், கைத்துமே செயநீரை யிறுத்துக்கொண்டு கனிவாகப் பூரமொடு பச்சைரெண்டும், பைத்துநீ பலம்ரெண்டு நிறுத்துக்கொண்டு-பதிவாகச்செயநீரில் அரைத்துவில்லை,மைத்துமோ ரவியிலே காயப்போடு-மயமாக அஞ்சுன்னக்குகையிலிட்டே. (173)

இட்டுநீ மூடியே புடத்தைப்போடு-இதமாக ஆறவிட்டுப் புடத்தைபோடு, கட்டுமே கடுஞ்சுன்னம் பூரச்சுன்னம்-கனிவாக யிச்சுன்னங் காலர்க்கொக்கும், பட்டுநீ சாரத்தை யிடையேசேர்த்து-பதிவாக வைத்திடவே பனியிற்றானும், நட்டுமே பலபலெனச் செயநீராகும்-நலமாக யிந்நீரில் விம்ரபோடே. (174)

## துரிசுச்சுன்னம்.

போட்டுமே பார்த்திடவே சிவக்துநீராம்-புகலவே யிந்நீரிற்துரிசி தோய்த்து, நாட்டவே யெட்டுநாள் ரவியிற்போடு- நலமாகக்கொக்கிற்கு போலேயாகும், வாட்டுமே பத்தெருவிற் புடத்தைப்போடு-வடிவாகக் கடுஞ்சுன்னந் துரிசிச்சுன்னம், ஆட்டுமே யிந்நாட்டுக் காலன் போலாம்-அறியப்பா சுன்னத்தின் போக்கைக்கேளே (175)

## சாறுவர.

போக்கான விராலியிலே யிடித்துமேதான் புகலரிய-சுன்னமது கலஞ்சியிட்டு, வாக்காகப் பிசைந்திடவே சாறுதானும் - வந்துமே கொப்பளிக்குந் தண்ணீர் போலே, தாக்கான தண்ணீரை யிறுத்துக்கொண்டு தாஷ்டிகமாய் லிங்கமது சேர்தானென்று, பாக்காகவோட்டிவிட்டுச் சுருக்குத்தாக்கு பதிவாகச் சாமமது கருக்குப்போடே. (176)

## லிங்கக்கட்டு வேதை.

போடவே லிங்கமது யுருகிக்கட்டும் - பொன்போலே கரியில் நின்று வாடும்பாரு, ஆடவே தங்கந்தா னிடைகொடுத்து-அடைவாக ரெண்டுமொன்று யுருக்கிக்கொண்டு, நாடவே செம்புதனிற் பத்துக்கொன்று-நாட்டினல் தங்கமது பத்துமாத்து, ஆடவே யிதைவைத்து ஜீவனத்தை-அடைவாகச் செய்துநீ யடவுபாரே (177)

## கெவுரிகட்டு அயக்களங்கு.

அடவாகக் கெவுரியது பலந்தானென்று-அன்பாகக் கரண்டிதனி விட்டுக்கொண்டு, திடமாக விராலியிலேச் சாற்றினாலே-திறமாக யிருசாமஞ்-சுருக்குப்போடு, நடமாக கெவுரிகட்டி மணியுமாகும்-நலமாக அயபொடிதான் பாதிசேர்த்து, விடமாகச் சேர்த்தரைத்து யுருக்கிப்போடு-வெகுசுருக்கா யுருகியது மணியுமாமே (178)

ஆமேதான் அயம்நின்று வுருகும்போது-அடைவாக நாலுக்கு ஒன்றுதங்கம், தாமேதான் தங்கமிடை நாகம்போடு - சரியாக நாக மிடை லிங்கம்போடு, காமேதான் லிங்கமிடை வீரம்போடு-கனிவாக யுருகையிலே காரந்தாக்கு, வாமேதான் அயந்தானுங் களங்கு மாகும்-வடிவான நவலோகம் நூற்றுக்கொன்றே. (179)

ஒன்றாக யிட்டுநீ யுருக்கிப்பாரு-ஓகோகோ மாத்துத்தான் பத்து மாகும், நன்றாக ஆணிக்குப் பத்துமாகும் - நலமாக யிதைவைத்துச் செலவுசெய்து, பன்றாக வாசியோ கத்தைப்பாரு - பதைபதைத்துத் திரியாதே நூலைப்பாரு, கன்றாக வுப்பினுட சுன்னம்பாரு - கருவான வாதமாங் கண்டுபாரே. (180)

கண்டுபார் யிரும்புதனைக் கண்டபோதே-கனிவாகத் தங்கமது யிறங்கும்பாரு, உண்டுபார் யிக்களங்கைச் செந்தூரித்து - முறையாக வுண்டிடவே மோடிமெத்த, வண்டுபார் வடிவான கோபமுற்றால் - வாராது யென்னபட்டும் வாதியோரே, கண்டுபார் யிக்களங்கைச் செந்தூரித்து - நலமாக வுண்டிடவே நாடிப்பாரே. (181

பாருநீ சரக்கைத்தான் கட்டியாடு -பதிவாக யெல்லாமும் பதங்க மாகும், காருநீ கொட்டினால் தேளேயாகும்-கனிவாகக்கொட்டாவிடிற் பிள்ளைப்பூச்சி, சேருநீ பெண்ணுடைய சினேகம் வேண்டாம் - சிறு வயதில் யீளையொடு யிளைப்புண்டாகும், தாருநீ சகலமுந்தான் சித்தி யில்லை-தாஷ்டிகமா யுப்பைமுந்திக் கட்டியாடே. (182)

## அபக்களங்கு செந்தூரம்.

ஆட்டியே களங்குசெந் தூரஞ்செய்ய-அடைவாகச் சொல்லுகிறே னறிந்துபாரு, கூட்டியே யிரும்பான களங்குவொன்று - குணமான கெந்தகந்தா னென்றுகூட்டி, தீட்டியே பொற்றலையின் சாற்றாலாட்டித் திடமாக வில்லைதட்டிக் காயப்போடு, வாட்டியே யகலிலிட்டுச் சிலை-செய்து -வடிவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடே. (183)

போட்டுநீ தீயாற்றி யெடுத்துப்பாரு-புகலரிய செந்தூர முருக்கம்பூப்போல்- நாட்டியே நவலோகமெட்டுமோடும்-நலமாகப் பல பிணிக ளோடிப்போகும், வாட்டிநீ மயங்காதே நல்லவித்தை-வடிவாகச் செந்தூரம் அந்திசந்தி, காட்டுமே செந்தூரக் குன்றியுண்ணு-கனிவாக வயிரம்போல் மேனியாமே. (184)

ஆமேதான் செந்தூரம் பாவிலுண்ணு-அறுவழிந்து போகாதே கையூகத்தை, நாமேதான் பாகமாய்ப் பண்ணித்தேறு - நலமாகக் கேசரியை நாடியூது, வாமேதான் ஆதிடவே வாசியோகம்-வண்மையா யுண்டாகும் நடத்தைபாரு, தாமேதான் சொல்லிவிட்டேன் முந்நூறு தன்னில்-தாஷ்டிகமா யெல்லாமுஞ் சித்தியாமே (185)

## வெள்ளிவித்தை.

சித்தியா மின்னமொரு வெள்ளிமார்க்கம்-செப்புகிறேன் இது லெகுவு முன்னேபாரு, புத்தியாய்ப் பார்த்திடவே பாகமாகும்-போக்கோடே சொல்லுகிறேன் பூண்டுகேளு, நத்தியே வெள்ளைப்பாஷாணந்தானும்-கலமாகப் பலமொன்று நிறுத்துநீயும், சத்தியமாய் நிலையறிந்து புத்தியாகச்-சரியாகக் கரண்டிதனில் வைத்திடாயே. (186

வைத்திடவே விராலியிலைச் சாற்றினாலே-வகையாகச் சுருக்குகொடு ஜாமம்காலு, பைத்திடவே சுறுக்கிட்டு ஆனபின்பு-பதிவாக வுண்டோடு சுன்னம்பண்ணு. கைத்திடவே யதின்மேலே யரைத்துக்கட்டி-கனிவாகக் காயவைத்து ஆனபின்பு, புத்தியாய்க் காடையென்ற புடத்தைப்போடு-புகலரிய யெல்லாமுஞ் சித்தியாமே. (187)

ஆமேதான் கட்டிநின்ற பாஷாணத்தை-அடைவாக வெள்ளிதனி விடையேயிய நாமேதா ஹெறுங்கியது தூளாய்நிற்கும்-நலமாக அந்தவிடை சூதஞ்சேர்த்து, வாமேதான் முன்னீரா லரைத்துமைபோல்-வடிவாக வில்லைதட்டிக் காயப்போடு, சாமேதான் பத்தெருவிற் புடத்தைப்போடு-சரியாக யெடுத்துப்பார் தவளமாமே. (188)

தவளமாம் வெள்ளீயம் நூற்றுக்கொன்று-தாஷ்டிகமாய்க் கொடுத்துருக்கு வெள்ளீயந்தான், கவளமாய் வெள்ளியது பத்துமாத்து-கனிவாக யிதைவைத்து ஜீவனத்தை, பவளமாய்ச் செய்துகொண்டு ஞானம்பாரு - பாக்கியங்கள் மிகவாகும் பருதியுள்ளே, தவளமாம் வாழ்வீர்கள் வெள்ளிவித்தை - தப்பாது நிச்சயமாந் தன்மைபாரே.

பாரேநீ முன்னேதான் வெள்ளிவித்தை-பக்குவமாய்ச் செய்துநீ ஜீவனத்தை, காரேநீ பண்ணியிடு ராஜயோகம் - கனமாகச் செய்திடவே கருத்து நல்லாய், வேரேநீ யடிதொடுத்து யேறவேணும்-வேதாந்த நூல்களைத்தான் விரைந்துபாரு, சாரேநீ சலியாதே இன்னம்பாரு-சாக்ஷியா யெல்லாமுஞ் சித்தியாமே. (190)

ஆமேதான் வாதமது எளிதிலாமோ-அடைவாக முன்செய்த தவத்திலாகும், தாமேதான் சாஸ்திரத்தைப் பூண்டுபாரு-சரியாகச் செய்தாலே லாபமாகும், வாமேதா னறிவழிந்து போகாதே தான்-வடிவாக பெருநூலும் சித்திமெத்த, பாமேதான் விருந்திட்டுப் பணக்கள் செய்தால்-பதிவாக யெல்லாமும் பகர்ந்துபாரே. (191)

பகர்ந்துபார் வெள்ளிவித்தை செய்துகொண்டு-பதிபாச மாகவே செய்துபாரு, வகர்ந்துபார் வித்தைதா னறியாமூடர்-வழக்கமாம் வேதமுக மறிந்துகொண்டு, தகர்ந்துபார் வேதமுகந் தெரியாவாதி-தாஷ்டிகமா யெல்லாமுஞ் சேர்ந்துகண்டு, உகர்ந்துபா ரெல்லாமும் பாகமெல்லாம்-உண்மையாய்ச் சித்தியா மறிந்துபாரே. (192)

தாளகக்குரு

அறிந்துபார் இன்னமொரு சேதிகேளு-ஆடலா மண்டரண்ட மணைத்துமோடப், பிறிந்துபார் தாளகமும் பலமும் வாங்கிப்-பேசாதே சுத்திமுறை பேசக்கேளு, நறிந்துமே தாளகத்தைச் சுன்னந்தன்னில்-நலமாக வைத்துமே சுத்திசெய்து, வறிந்துநீ விராலியிலைச் சாற்றாலாட்டி-வடிவாக வில்லைசெய்து காயப்போடே. (193)

போடவே காயவைத்து அகலில்மூடிப்-போக்கோடே சொல்லுகிறேம் புடத்தைப்போடு, ஆடவே வெள்ளையாய்க் குருவுமாகும்-அன்பாகச் செம்புதனில் நூற்றுக் கொன்று, நாடவே கொடுத்துப்பார் மாற்தெட்டேகால்-நலமாக யிருக்குமது வழியுமாகும், கூடவே வழியறிந்து கூடவேணும்-குணமாகும் மனமாகுங் குருவைக்காரே. (194

காருமே குருக்காண வேணுமென்றால்-கருவாகச் சாஸ்திரத்தை நம்பிப்பாரு, பாருமே சாஸ்திரத்தைப் பார்த்தால்சித்தி-பாராட்டாற் பலனில்லை பாருபாரு, காருமே நம்பினுல் வாதமாகுங்-கருவறியா மாந்தருக்குக் காணுமோசொல், சாருமே வழியறிந்து துறையறிந்து சரியாகச் செய்தவனே சித்தன்தானே. (195)

சித்தனு யாவதற்கு வழியைக்கேளு - சிவவிந்தைக் கட்டியதோர் முறைமையாலே, முத்தனு யாவதற்கு வழியுஞ்சொனனேன்-மோக முற்ற வாதியென்று லொன்றுமில்லை, சத்தியமாய் ஜெயநீரை வைத்துக்கொண்டு-சரியாக யெல்லாமுஞ் க்ஷணத்திற்கண்டு, புத்தியாய் செய்துநீ வாதந்தன்னைப் போக்கோடே சகலசித்தி யாகும்பாரே. 196

ஆகுமே மனக்குரங்கு செய்யொட்டாது-ஆதியாய் நின்றுமே அலைவாரப்பா, வேகமா யலைபாதே நூலைப்பாரு - வேதாந்தத் தாய் தன்னை நித்தம்பூசி, சாகுமே பெண்டீரைச் சேர்ந்திடாதே-சரியான தேகமது மிஞ்சிப் போகும், நோகுமே யிதையறிந்து வல்லோரெல் லாம்-நுண்மையா யிருந்தார்கள் குணமாய்த்தானே. (197)

கெந்திநீறு.

குணமாகக் கெர்தகந்தான் பலமும்நாலு-கூத்தாடும் பச்சிலையில் துருசியிட்டு, பண்பாக யிலைச்சாறு பிழிந்துகொண்டு-பதிவாகக்கெந்த கத்தை ஜாமமாட்டி, உணவாக வில்லைதட்டி ரவியிற்போடு-உற்றுமே காய்ந்தபின் அகலிலிட்டு, வணக்கமாய்க் காயவைத்துப் புடமே காடை-வழியாகக்கெந்தகந்தா னீறுமாமே. (198)

ஆமேதான் கெர்தகத்தி னீறுதன்னால்-ஆடலாம் நவலோக மெட்டுமோடும், தாமேதான் மாற்றென்ன பதினாறும்-நாடியே விக்கிரகங் குண்டலங்கள், வாமேதான் பண்ணியே போட்டுக்கொண்டு வடிவாக வாசியோ கத்தைப்பாரு, தாமேதான் சுழிமுனையில் நாட் டம்பாரு-தாஷ்டிகமாய்ச் சகலசித்து மாகுந்தானே. (199)

தானென்ற தங்கம்விட்டால் வர்ணம்போச்சு-தாஷ்டிகமாய்க் கெந்தி விட்டால் செந்தூரம்போச்சு, கோனென்ற லிங்கம்விட்டால் வித்தைபோச்சு-கூட்டியே விந்தைவிட்டா லுயிரும் போச்சு, வானெ ன்ற சாஸ்திரத்தைப் படியாமூடர்-வடிவாகச் சித்தியில்லை மாண்பர் மெத்த, கானென்ற கைபாகம் விட்டாற்கேளு-கனமான வாதவித்தை யில்லைபாரே. (200)

பாரேநீ வுப்பைவிட்டால் வர்ணம்போச்சு-பதிவாக ஞானம் விட் டால் வாதம்போச்சு, காருமே அயச்செம்பை முன்னேவைத்து-கனி வாகும் வாதிகளே யெல்லாம்பாரு, சேருமேஎண்ணம் விட்டா லெல் லாம்போச்சு-செம்மையா யிருந்தாலே அதிதமாச்சு, வாருமே யினத் தோடே செய்துபாரு-வடிவாக யெல்லாமும் வண்மையாமே. (201)

ஆமேதான் பொருளறியார் வாதக்காணுர்-அடைவாக வெள்ளி வித்தை மார்க்கந்தானும், நாமேதான் சொல்லிவைத்தே னிந்தவித் தை-நாதாக்கள் சொல்லாத சொல்லைத்தானும், பாமேதா னில்வுலகில் ஞானயோகம்-பகலிரவாய்ப் பார்த்தவனே பரமயோகி பூமேதான் வாதசித்தி யாக வென்றுற்-புகலரிய யிந்நூலைப் பேணிப்பாரே. (202)

பேணியே சொல்லுகிறே னின்னங்கேளு-பேசாதே யொருவருக்கும்புறஞ் சொல்லாதே, ஆணியாம் வயித்தியத்தில் விளைந்து பூருஅடைவான சித்தியெல்லா மிதற்குள்ளாச்சு, காணியாம் வல்லோர்கள் செய்வாரப்பா-காரணமாய் விதியதனைக் கண்டுகொண்டு, தோஷிமேலேறினவன் போலேயாகுர்-துடியான வாதத்தின் செய்கைதானே.

## நாகபற்பம்

செய்கையாம் நாகபற்பச் செயலைக்கேளு-செயமாகப் பற்பத்தைச் செய்துபாரு, பைகையாம் நாகமது பலந்தான் பத்து-பதிவாக யிலுப்பெண்ணெய் தனிலுருக்கி, வைகையாம் வடிவாகக் காண்டியிட்டு-வளமாக வுருக்கியே சோமனூறி, பைகையா முகத்திலே தூவிப்பாரு-பதிவாக நீறியது சுன்னமாமே. (204)

சுன்னமாம் நாகத்தில் வீரஞ்சேர்த்து - சுருக்காக யரைத்துநீ சொல்லக்கேளு, நன்மையாய் நால்ஜாமம் அரைத்து மைப்போல் -நாடியே வில்லைதட்டிக் காயப்போடு, சொன்னபடி காய்ந்தவுட னின்னங்கேளு-சூக்ஷமாய்க் கவசமது கட்டிப்பின்பு, கன்னல் போற் கவசமது கட்டிப்பின்பு-கனமாகப் புடமிடவே கண்டுபாரே. (205)

கண்டுபார் நாகமறு பூத்தபூவைக் கனிவாகப் பலம்நாலு நிறுத்துக்கொண்டு, பண்டுபார் பூத்தாச மிடையே சேர்த்துப்-பதிவாகப் புகைநீரா லரைத்துச்சாமம், விண்டுபா ரரைத்துமே வில்லைதட்டி-விதமாகக் காயவைத்துப் பின்புகேளு, முண்டுபார் காயவைத்துக் கிட்டித் திலிட்டு-முக்கியமாய் மூடியதைச் சீலைசெய்யே. (206)

## நாகபற்பவேதை.

சீலைசெய்து காயவைத்து அடுப்பிலேற்றிச்-செயமாகத் தீயெரிப்பாய் எட்டுச்சாமம், வாலைசெய்து யெரித்திடுவாய் செந்தூரமாகும்-வடிவான செந்தூரம் முருக்கம்பூப்போல், காலைசெய்து யிருக்குமது பின்புநீயும்-கனிவாகக் செம்புதனில் நூற்றுக்கொன்று சாலையா மாத்தென்ன பன்னிரண்டு-சரியாக யெல்லாமுஞ் சித்தியாமே. (207)

## நாகபற்பத்தால் தீரும் வியாதி

ஆமேதான் நாகத்தின் சுன்னந்தன்னை-அடைவாகச் சொல்லிவிட்டேனுலகுதன்னில், வாமேதா னந்திசந்தி வெல்லந் தன்னில்-வடிவாக மண்டலந்தா னுண்டாயானால், காமேதான் வாதமது எண்பத்துநாலும்-கனிவாகப் பித்தமதும் நாற்பத்தைந்து, சாமேதா னோடிவிடுஞ் சிலேத்மரோகஞ் சரியான மகோதரமுஞ் சாடிப்போமே. (208)

சாடிப்போம் ரத்தபித்த பெரும்பாடெல்லாஞ்-சாதித்து வோடு மடா சலிப்போயில்லை. வாடிப்போம் வாந்திமுதல் ரோகமெல்லாம்-வடிவாக வோடுமடா சித்தியாகும், கூடிப்போம் நீராம்பல் வெட்டை போகும்-குணமாகு மெல்லாமுங் கூர்ந்துபாரு, சூடிப்போஞ் சகலகலைக் கியானமெல்லாஞ்-சுகமாகும் யெல்லாமுஞ் சூட்க்ஷம்பாரே. (209)

பாருமே ஆம்பலொடு தந்தவாயு - பதிவாகப் போகுமடா பண்புள்ளோர்க்கு, காருமே நவலோகம் ஏமமாகுங்-கனிவாக யேமத்தாற் கெர்விக்காதே, நாருமே செயலறிந்தால் பவுத்திரம் நீங்கும்-நலமாகும் பிலமாகும் நாட்டம்பாரு, சாருமே யிவையாலே யெல்லாமாச்சு-சாக்ஷியாய்க் கண்டவனே சித்தனுமே. (210)

ஆமேதான் கண்டவர்கள் சொல்லுவாரோ அலையாதே நாய் போலேயிருந்துபாரு, காமேதா னலேந்தாலே யென்னலாபங்-கருத்துறவே பார்த்தாலே யுலகுதன்னில், சாமேதா னிம்மருந்தைப் பண்ணிக் கொண்டு-சரியாகப் பலபிணிகள் தனக்குத்தானும், நாமேதான் கொடுத்திட்டுப் பணத்தைவாங்கி-நலமாக வாதவித்தை பார்த்திடாயே. (211)

பார்த்திடவே சூதத்தை முன்னேபாரு-பதிவாக யெல்லாமுஞ் க்ஷணத்திற்சித்தி, ஏர்த்திடவே சூதமது யெளிதோவல்ல-இதமான தெவுனமது யெளிதிலாகும், கார்த்திடவே நிழல்போலே காத்திருந்தால்-கனிவாகுஞ் சகலசித்தி கருதிப்பாரு, நார்த்திடவே நெல்முனைக்கும் வாதப்போக்கு-நமைாகச் சித்திக்கும் நாடிப்பாரே. (212)

நாடியே வயித்தியத்தைப் பொய்யென்றுக்கால்-நலமில்லாப் புழுப்போலே யழிந்துபோவான், கூடியே பெண்புருடர் கூடிவாழ்ந்தால்-குணமாகச் சொல்லுவரோ உலகநீதி, பாடியதோர் பயனறிந்தால் வாதியாவான்-பதிவாகச் சொல்லிவிட்டே னறிவுள்ளோர்க்கு, வாடியே திரியாதே நூலைப்பாரு-வடிவாகக் காரசா ரத்தைப்பாரே.

பாருமே சகலகலைக் கியானமெல்லாம் - பண்பாகப் பார்த்துமே கருவையுன்னி, காருமே முந்நூற்றில் சொல்லிப்போட்டேன்-கவனமாய்க் காயசித்தி யோகசித்தி, வாருமே வாதசித்தி யாகுமப்பா-வடிவான நூலெல்லாஞ்சித்தியாகும், தீரமா யறிந்தவனே சித்தன் சித்தன்-திடமாக யெல்லாமுங் காரமாமே, (214)

## காந்தச்சத்து.

ஆமேதான் யின்னமொரு கருமாணங்கேள்-அறிந்திடவே சொல்லுகிறே னன்பாய்க்கேளு, நாமேதான் காந்தமது பலமும்பத்து நலமாக வுடைத்துமே கல்வத்திட்டு, சாமேதா விட்டுமே துரிசிகேளு-சரியாக வெள்ளையாய் நீத்திப்போடு, பாமேதான் கெந்தியது முக்கால் போடு-பருவமாய் வெண்காரஞ் சேருரெண்டே. (215)

ரெண்டாக யிதுவெல்லாம் நெகிழவாட்டி-நேராக வில்லைதட்டிக் காயப்போடு, பண்டாக வுப்புடனே சுன்னங்கூட்டிப்-பதிவாக விரு சாம மரைத்துக்கொண்டு, துண்டாகக் கவசமிட்டுக் காயவைத்து-துரிதமாய்ப் பத்தெருவிற் புடத்தைப்போடு, வண்டதுபோல்கருப்பாகும் பின்புகேளு-வடிவாகக் குகையிலிட்டு வுருக்கிடாயே. (216)

உருக்கியே கல்வத்தி லிதனையிட்டு-உணர்வாகப் பாதியாய்க்காரமிட்டு, நெருக்கியே பழச்சாறு விட்டரைத்து-நேமமாய் முன்போலே வில்லைதட்டி, அருக்கியே யகலிலிட்டுப் புடத்தைப்போடு - அடைவாகக் குகையிலிட்டு வுருக்கித்தீரு, பெருக்கவே வெள்ளிபோற் கண்விட்டாடும் - பிசகாமல் முன்போலே செய்திடாயே. (217)

முன்போலே யரைத்துநீ புடத்தைப்போடு-முறையாயிப் படி மூன்று புடமேபோடு, தன்போலே யுருகியல்லோ சத்துமாகும்-தாஷ்டிகமாய்ச் சத்தெடுத்துக் கரியில்வைத்து, வன்போலே யுருக்கிடவே வெள்ளிபொன்போல்-வடிவாக ஆடிவிடுங் காந்தச்சத்து, அன்பாகக் காயசித்தி யுடனேயாகும்-ஆடலா மொருகோடி வித்தைதானே. 218

வித்தையை மெழுகுகட்டிக் கிண்ணிவார்த்து-விதமாகக் கிண்ணிக்குள் பாலைவிட்டு, நத்தியே யந்திசந்தி யுண்டாயானால்-நமனுமே வந்தணுகான் பாலைபோலாஞ், சித்தியாம்நரைதிரைகளற்றுப்போகுஞ்-சிறப்பான வாதமெல்லாங் காந்தத்தாட்டு, புத்தியினால் கண்டவனே வாதியாவான் புகலரிய வாதியவன் கண்டுபாரே. (219)

## காந்தக்களங்கு.

பாருநீ காந்தசத்து வுருகும்போது-பரிவாக நாலுக்கு ஒன்று தங்கஞ், சாருநீ தங்கமிடை, நாகம்போடு - சலியாதே களங்காகுஞ் செம்புதன்னில், வாருமே நூற்றுக்கு ஒன்றுபோடு-வடிவாகச் செம்புதான் பழுத்தநேர்மை. கோருமே பத்தரையுங் காணுமாத்து-குணமாகக் குருவருளைக் கூர்ந்துபாரே. (220)

## காந்தச்செந்தூரம்.

பாருமே செந்தூரஞ் செய்யக்கேளு-பதிவாகச் சத்ததுவும் பலமும்நாலு சாருமே கெந்தியொன்று சேர்த்துக்கொண்டு-சமர்த்தாகப் பொற்றலையின் சாற்றாலாட்டி, கூருமே வில்லைதட்டிக்காயப்போடு-குணமாகக் காய்ந்தபின் மொழியக்கேளு, தாருமே யோட்டிலிட்டு வோடுமூடித்-தயவாகப் பத்தெருவிற் புடத்தைப்போடே. 221

போடவே தீயாற்றி யெடுத்துப்பாரு-போக்கோடே செந்தூர முருக்கம்பூப்போல், நாடவேயிருக்குமது செந்தூரந்தான்-நலமாகச் செந்தூரம் நூற்றுக்கொன்று, வாடவே கொடுத்திடவே மாத்துக் கேளு-வடிவாக யிருபத்தி யைந்துமாத்து, காடவே ஆபரணம் விக்கிரகத்தை-கனிவாகச் செய்திடவே சித்தியாமே. (222)

ஆமேதான் செந்தூரங் குன்றியுண்ணு-அடைவான நோயெல்லாந் தவுடுபொடியாகும், சாமேதான் நாள்பட்ட வியாதியெல்லாந்-தானுக வோடிவிடுஞ் சார்ந்துபாரு, வாமேதான் சீவனத்தைச் செய்துகொண்டு - மாக்ஷிமையா யிருந்தவனே யோகசித்தன், தாமேதான் சொல்லிவிட்டேன் காந்தப்போக்கு-தப்பாம யெல்லாமுர்தன்மை பாரே. (223)

பாருமே செந்தூரத் தாலேயோகம்-பண்பாகச் சித்திக்கும் பரிந்துபாரு, காருமே சிவசொத்தை வறுமைபோலுண்ணு-கனிவாகக் கும்பியெழு நூறுதன்னில், தாருமே சொல்லிவிட்டேன் செந்தூரத்தை-தன்மையுடன் நீவைத்து வுண்டுதேறு, கூருமே தனையறிந்தாற் குணமுமாகும்-கொடுத்துருக்க மாத்ததுவும் பத்துமாமே. (224)

## கெந்தகச்செப்பு விபரம்.

ஆமேதான் கெந்தகத்தின் செம்புசொல்வேன்-ஆச்சரியம் வெகு லெகுவு முன்னேபாரு, நாமேதான் கெந்தியது பலமும்பத்து நலமாகப் பசுவின்பால் படியுமொன்று, காமேதான் சட்டிதனி விட்டுப்பாதி- கனிவாக மேலேதான் சீலைகட்டி, சாமேதான் கெந்தகத்தைப் பரப்பிமேலே-சரியாக மேற்சட்டி மூடிடாயே. (225)

மூடியே அடிச்சட்டி புதைத்துப்போடு-முனையாக மேலேதான் புடத்தைப்போடு, கூடியே தீயாறி யெடுத்துப்பாரு-குணமாக மணிமணியா யிரங்கிப்போகும், வாடியே யிப்படியே தரமேயைந்து - வடிவாகப் பொன்னிறம்போல் நிற்கும்பாரு, சாடியே மணியெல்லா மெடுத்துக்கொண்டு - சரியாகச் சேர்க்குகிற தன்மைகேளே. (226)

தன்மையாங் கெந்திக்கு யிடையேநீலன்—தாஷ்டிகமாய்ச் சேர்த்து நீகாரம்பாதி, நன்மையாய்ச் சேர்த்துநீ பழச்சாறுவிட்டு - நலமாக யிருசாமந் தானரைத்து, வண்மையா யுண்டை பண்ணிக் காயவைத்து -வடிவாக அதின்மேலே கவசங்கேளு, பண்மையா யுப்பிட்டுச் சின்ன மிட்டுப் பரிவாக நன்றாய்நீ யரைத்துக்கொள்ளே. (227)

அரைத்துநீ யுண்டைக்குக் கவசங்கட்டி-அடைவாக வதின்மேலே மண்ணுந்தானும், பரைத்துநீ கவசமது கட்டிப்பின்பு-பண்பாகப் பத் தெருவிற் புடத்தைப்போடு, நரைத்துமே யெடுத்துப்பார் கரியாய் நிற்கும்-நான்கண்ட படிசொன்னேன் நன்மைமெத்த, அரைத்துநீ மயங்காதே குகையிலிட்டு-மாளவே யுருக்கிடவே சத்துமாமே. (228)

சத்தாகுந் தானெடுத்துப் பார்க்கும்போது-சரியாக வெள்ளிமணி போலேயாகும். முத்தான குருவாகும் மேன்மைமெத்த - மூவுலகுக் கதிகமடா முறைகண்டோர்க்கு, சித்தான சித்தியெல்லா மிதனாலாச்சு சிறப்பான வாதமென்ன வசியமென்ன, நத்தியே பார்த்தாலே யெல் லாஞ் சித்தி-நாமறிந்த படிசொன்னோம் நயந்துபாரே. (229)

## கெந்தகச்செம்பு காந்தச்சேர்மானம்

நயமாகச் சொல்லுகிறே னின்னங்கேளு-நாமுரைத்த படியாகு கைபாகத்தை, பயமாகக் கெந்தகத்தின் சத்துவொன்று-பதிவான காந்தசத்து பலமுமொன்று, தயவாக ரெண்டுமொன்று யுருக்கித்திரு- தடையறவே யுருகியே சத்துமாகும், கயப்பான சத்துத்தான் கடிய சத்தாம்-கனிவாக யெல்லாமுஞ் சித்திபாரே. (230)

பாருநீ ரெண்டுமொன்று யுருக்கிக்கொண்டு-பதிவாகச் செம்பாகும் பருவங்கேளு, காருமே புகைநீரை விட்டுஆட்டி-நலமாக வில்லைதட்டிக் காயப்போடு, சாருமே காய்ந்தபின்பு அகலிலிட்டுச் - சார்வாகப் புட மொன்று போட்டுத்திரு, காருமே போட்டெடுத்துக் காரங்கூட்டிக் -கனிவாக யுருக்கிப்பார் செம்புமாமே. (231)

## கெந்தகச்செம்பு மகிமை

செம்பாகுங் கெந்தகத்தின் செம்புமாகும்-செப்பரிய கெந்தகத் தின் செம்பினாலே, வம்பாக நடேசர்தான் வார்த்தசெம்பு—வடிவாக முந்நூறில் வழுத்திப்போட்டேன், நம்பான பெரியோர்கள் சொல்லு மார்க்கம்-நானறிந்த படியாகுஞ் செம்பில்வேதை, பம்பரமா யாட்டி வைக்கும் வெள்ளிதன்னில்-பழுக்குமே நவலோகம் பழுத்தவாறே. 232

வாறுகேள் கெந்தகத்தின் செம்பினலே-வடிவான நடராஜர்வந்து நித்தார், தேறுகேள் நடேசரைத்தான் வார்க்கும்போது-திடமாக யில்லாத சேதிகேட்டு, கூறுகேள் சிற்பரைத்தான் கோபங்கொண்டு-கொடிதாகத் தானுரைத்தார் அரனரப்போ, பாருகேள் மூலர்வந்து பரிந்துதானும்-பாகமாய் வார்த்திட்டார் பரிசுதானே. (233)

தானென்ற கெந்தகத்தின் செம்பு மார்க்கம் - தாஷ்டிகமாய் மூந்நூற்றில் தன்மை சொன்னேன், வானென்ற அதைமுடிக்கும் பாகஞ் சொன்னேன் - வடிவால காயசித்தி யோகஞ் சொன்னேன், கானென்ற நூல்தனிலே யில்லை யில்லை - கனிவாக யிந்தநூல் கைபாகத்தை, நானென்ற ஆணவத்தாற் சொல்லிப் போட்டேன் - நாய் போலே யலையாதே நூலைப்பாரே. (234)

## கெந்தகச் செம்பு களங்கு

பாருமே கெந்தகத்தின் செம்புதன்னை-பதிவாகச் செந்தூரம் பண்ணக்கேளு, காருகேள் கெந்தியுட செம்புநாலு-நலமாகத் தங்கமொன்று நாகமொன்று, கூருகே ளிதையுருக்கக் களங்குமாகும்- குணமாக நவலோகம் நூற்றுக்கொன்று, காருமே யிட்டிடவே மாத்துப் பத்து-கனிவாக உப்புக்குங் காவிக்குந்தானே. (235)

தானென்ற உப்புக்குங் காவிக்கோடா-தனியாகப் புடத்துக்கு யிரங்கும்பாரு, வானென்ற யிதைவிற்றுச் செலவுசெய்து-வடிவாக வுண்டுடுத்தி வழியைத்தேடு, தேனென்ற சிவகாமி சொல்லக்கேட்டுச் சித்தாகப் புத்திதான் செழுமை கூர்ந்து, நானென்ற ஆணவத்தாற் சொல்லிப்போட்டேன்-நலமாதி கெந்தியுட ஆண்மைதானே. (236)

ஆண்மையாங் கெந்தகத்தின் செம்பினலே-ஆடலாமொருகோடி வித்தையப்பா, தாண்மையா மூலகத்தோர் செய்யமாட்டார்-தறுகுறும்பன் சொல்லுவான் யெய்யாவாறு, வாண்மையாஞ் சிவநிறைந்த யோகிக்கப்பா-வழியோடே கைபாகமருவிக்காணும், ஏண்மையாய்ப் போகாமல் கெந்திமார்க்கம்-இயல்பாகச் செய்துநீ யிருந்திடாயே. 237

இருந்திட்ட பஞ்சபூ தத்தைச் சொன்னேன் - இயல்பான முப்பூவி னிணக்குஞ் சொன்னேன், க்றந்திட்ட பால்போலே கருத்துச் சொன்னேன் - காரணமாய் நல்விபரங் கருதிச் சொன்னேன், தருந்திட்ட ஆத்தாளைக் கேட்டுக்கேட்டுத் - தைரியமாய்ச் சொல்லிவிட்டேன் நல்லபாகம், கருந்திட்ட மாகவே யுலகின் வாழ்க்கை - காரணமாய்ச் சொல்லுகிறேன் கருத்துத்தானே. (238)

தானென்ற வுலகத்தில் வாதமோதான்தாஷ்டிகமா யுட்கருவும் புறக்கருவுஞ்சொன்னேன், ஊனென்ற வுட்கருவை விட்டாயானால் உலகத்தில்மானிடராய்ப்பிறப்பார்மட்டை, வானென்ற அவசரத்திற் செய்தாலப்பா-வடிவாக ஒன்றுந்தான் சித்திக்காது, கானென்று ஆனவத்தாற் கெட்டோமென்று-நாய்போலே திரித்தலைந்து மாளுவாரே.

மாளாம லிருக்கவல்லோ செந்தூரஞ்சொன்னேன்-மயமாகச் செந்தூர மார்க்கந்தன்னை, தேளான பசியடங்கும்வாறுசொன்னேன்-செணத்திலே ஞானசித்தி திறமாய்ச்சொன்னேன், கோளான குடும்பத்தில் நில்லாதென்று-கொரேமாய் வந்திட்ட குணமுஞ்சொன்னேன், பாளான வுடலைவிட்டு வுயிருபோன-பண்பான கதையாகும் பரிவதாமே.

ஆமேதா னின்னமொரு சேதிகேளு-ஆச்சரியம் கெந்தியுடசெம்பைச்சொன்னேன், பாமேதா வதுகொடுக்கும் பாகஞ்சொன்னேன் - பதிவாகக் களங்குசெந் தூரஞ் சொன்னேன், தாமேதான் சுன்னமது மார்க்கஞ் சொன்னேன் - தயவாக வாதமது வலுக்கச் சென்னேன், காமேதான் சவுக்காரக் குருவைத்தானுங் - கண்டறிந்த படி சொல்வேன் கருதிப்பாரே. (241)

சவுக்காரம்

கருதியே சித்திரைவை காசிக்குள்ளே-கனலெழுந்து பூத்து நிற்கும் மண்ணைவாரி, நருதியே நாலாறு படியெடுத்து-நலமாகப் பரணி படி ரெட்டிப்பூத்தி, வறுதியே கலக்கியதைப் பின்புகேளு-வடிவாகக் கடல்நுரைச் சுன்னந்தானும், குருதியே படிநாலு அளந்து விட்டுக்-குணமாகக் கல்லுப்புப் படிதான்ரெண்டே. (242)

இரண்டாகத் தானளந்து பாண்டத்திட்டு-நேர்மையாய்க் கலக்கியே தெளிவிறுத்து, கண்டாகப் புதுச்சட்டி தன்னிலிட்டுக், காரணமாய் ஒட்டயெரி குழம்புபோல, பண்டாக அகப்பையினாலெடுத்துத்தானே -பக்குவமாய்ச் சாம்பலாற் பாத்திகட்டி, வண்டாகப் பாத்திதனிற் துணியைப்போட்டு-வடிவாக வதின்மேலே குழம்பைவாரே. (243)

வார்த்துநீ மூடிவைக்கச் சாம்பல்தானும்-வடிவாக நீரிழுக்கும் வண்மையாக, கார்த்துநீ மயங்காதே யின்னங்கேளு-கருவான விளாங்காய்தான் போலேயப்பா, சார்த்துநீ உண்டைபண்ணிக்காயப்போடு-தாஷ்டிகமா யெண்ணெய்க்கும் முறையைக்கேளு, வர்த்துமே வெடியுப்புச் செயநீர்தன்னை-இயம்புகிறேன் கைபாகவரிசைகேளே. (244)

## வெடியுப்புச்செய நீர்

கேளுநீ வெடியுப்பு பலமுமெட்டு-கெடியாகச் சீனமொன்று சார மொன்று, ஆளுநீ புளியெட்டுக் கூடக்கூட்டி - அடைவாகக் கல்லுர வில் போட்டுத்தானே, வாளுநீ யிடித்துயதை யைத்தானே வள மாகத் தீயெரிப்பாய் சுன்னமாச்சு, சாளுமே சுன்னத்தைப் பனியில் வைக்கச் - சரியாகப் பலபலெனச்செயநீராமே. (245)

ஆமேதான் செயநீரி லுண்டை தன்னை-அடைவாகத் தோய்த்திட்டு ரவிபிற்போடு, வாமேதான் சவுக்காரந் தானுமாச்சு, வடிவாக யெண் ணெய்யெல்லாங் கக்கும்பாரு, நாமேதான் யெண்ணெய்யது கக்கிப் போனால்-நலமான வழலையென்ற சுன்னமாச்சு, காமேதான் யிச்சுன் னங் கொடியகாரங்-கனிவாக யச்சுன்னங் குகையிற்றானே. (246)

தானேதான் அஞ்சுசுன்னங் குகையிலிட்டு-தாஷ்டிகமாய் மூடியே கோழியாக, நானேதான் புடமிட்டு யெடுத்துப்பார்த்தால்-நலமாகச் சிவுக்காரஞ் சுன்னமாச்சு, வானேதான் சவுக்காரச் சுன்னந்தானும்-வடி வான வழலையென்றே சுன்னமாச்சு, கானென்ற வாதமது ஏவல்கேட் குங்-கனிவாகச் சிறுபிள்ளை யாடுந்தானே. (247)

தானென்ற சவுக்காரஞ் சொன்னபாகந்-தாஷ்டிகமாய்ச்சித்தரெல்லா மென்மேற்கோபம், வானென்றசாஸ்திரத்தைப் பிடுங்கித்தானே-வடி வாகக் குகைதனிலே வைத்தாரப்பா, ஊனென்ற அதையெடுத்து வுல கத்தோர்க்கு - உறுதியாய்க் கொடுத்துவிட்டே னிந்நூல் தன்னில், கானென்ற சவுக்காரத் தாலேமைந்தா-கனிவாக வங்கமது சுன்னமாமே

## வெள்ளீயச் சுன்னம்.

ஆமேதான் வெள்ளீச் சுன்னத்தாலே-அடைவாகத் துரிசியது சுன் னமாகும், காமேதான் சவுக்காரம் பலமுமொன்று - கனிவாகக் கல் வத்தி லிட்டுத்தானும், தாமேதான் வாய்நீரா லரைத்துநன்றாய்த்-தள மாக வெள்ளீயக் தன்னிற்கூட்டி, பாமேதா னஞ்சுசுன்ன மேலேகாட் டிப்-பதிவாகக் காயவைத்துப் பண்புகேளே. (249)

## துருசிச் சுன்னம்.

பண்பாகப் பத்தெருவிற் புடத்தைப்போடு-பதிவாகப் புடமாறி யெடுத்துப்பார்த்தால், கண்பாக வெள்ளீயஞ் சுன்னமாகும்-நலமாகச் சுன்னத்தை யெடுத்துக்கல்வம், வண்பாக யிட்டுநீ நாலத்தொன்று- வடிவாக வீரமது சேர்த்துக்கொண்டு, கண்பார்வை யாகவே யுமிழ்நீர் விட்டு-கனிவாக யரைத்துநீ துரிசிமேலே. (250)

மேலாகக் கட்டியே காயப்போடு-மேன்மையாய்ப் பத்தெருவிற் புடத்தைப்போடு, காலாகப் புடமாறி யெடுத்துப் பார்த்தால் - கனிவாகத் துரிசியது சுன்னமாகும், வாலாகத் துரிசியென்ற சுன்னத்தாலே வடிவாகச் சரக்கெல்லாங் கட்டிப்போகும், பாலாகத் துரிசியென்ற சுன்னந்தானும்-பதிவாகக் களஞ்செடுத்துச் சொல்லக்கேளே. (251)

## ரசக்கட்டு

கேளுநீ விராலியிலை தன்னிலிட்டால்-கெடியாகச் சாறுவருங் கண்டுகொள்ளு, வாளுமே யிட்டுநீ சூதந்தன்னை-வடிவாக யிட்டுநீ பின்புகேளு, தாளுநீ கரியோட்டிற் குமுறக் காய்ச்சி-தாஷ்டிகமாய்ப் பார்த்திடவே கட்டிப்போகும், பாளுநீ யுருட்டியே வைத்துக்கொண்டு-பதிவாக யிறுகும்வகை பண்புகேளே. (252)

## ரசக்குளிகை மகிமை

பண்பாகக் கருவெனுவூ மத்தங்காயிற்—பதிவாக வுள்வைத்துப் புடத்தைப்போடு, நண்பாகக் காடையென்ற புடத்தைப்போடு-நலமாகயிப்படியே புடமேறாறு, தண்பாகப் புடம்போட்டு, யெடுத்துப் பார்த்தால்-தவளம்போல் நிறமதுதான் வெள்ளையாமே, வண்பாகக் குளிகைதனை வாயில்போட்டால்-வடிவான தேமது மருவுந்தானே. 253

தானென்ற குளிகைதனை வைத்துக்கொண்டு-தாஷ்டிகமாய்ச் கெவுனவெளி சுருக்கிலோடும், வானென்ற சொரூபமாங் குளிகையாகும் -வடிவாக ஆகாசந் தனிலெழும்பும், கானென்ற விந்துதான் கேமோடாது - கனிவாகப் பசுமாடு கறக்கும்போது, மானென்ற முதுகுதனில் வைத்திட்டாக்கால்-மயமாகப் பாலுதான் கறக்காவாறே. (254)

வாறுகேள் கறக்காது மாடுதானும்-வடிவாகத் தேகமது கற்றாணும், கூறுகே ளிப்படிக்குக் குளிகைபண்ணிக்-குணமாக ஐந்துமணிக் குளிகையாகும், தானுமே யிதைச்செய்து தாவடமாய்க்கோர்த்து-தாஷ்டிகமாய்க் கழுத்திலே போட்டுக்கொள்ளு, பாறுமே யஞ்செழுத்து மெட்டெழுத்தும்-பதிவாக வோதிடவே பின்புகேளே.

கேளுநீ அஷ்டகர்ம மாடலாகும்-கெடியாக விந்துதான் மிகவுண்டாகும், தாளுநீ ஆகாச கெவுன மோடும் – தாஷ்டிகமாய்க் கெவுன சித்தி க்ஷணத்திலாகும், வாளுநீ மோடிதம் பனங்கள் செய்யும்-வடிவான ஆக்ருஷண மிகவுண்டாகும், காளுநீ மகாவேகமுண்டாமப்பா -கனிவாகச் சித்திதருங் கண்டுபாரே. (256)

## வாலைரச பதங்கம்.

கண்டுபா ரின்னமொரு சேதிகேளு-கனிவான வைத்தியர்க்கு ஆதிபீடம், பண்டுபார் வாலைரச மெடுத்துக்கொண்டு-பதிவாக யிதைப் பதங்கஞ் சொல்வேனப்பா, குண்டுபோர் வாலைரசம் பலமுமொன்று-குணமாகச் சிங்கியது பலமுமொன்று, துண்டுமே ரெண்டுமொன்ருய்ப் புகைநீர் விட்டுத்-துடியாக யிருசாம மரைத்திடாயே. (257)

அரைத்துநீ வில்லைதட்டிக் காயப்போடு - அடைவாகச் சிறுசட்டி ரெண்டெடுத்து, வரைத்துநீ வாயதனைத் தேய்ச்சுப்போடு - வடிவாக யுள்ளிட்டு மேலேமூடி, அரைத்துமே சீலைமண் வலுக்கச்செய்து - அடைவாக வுலையில் வைத்து ஊதுமெள்ள, பரைத்துமே நன்ருக ஆதிப்பின்பு - பதிவாகச் சாமமது மொன்றுதானே. (258)

தானேதான் நூற்றுக்கு மெல்லத்தானுந் தடையறவே கவசம் தைப் பிரித்துப்பாரு, வானேதான் வாலைரச முயரயேறி - வடிவாக பீருந்துவிடும் வண்மையாக, கானேதா னுயரத்தா னேறிநின்ற- கனி வான பதங்கமதை வழித்துக்கொண்டு, மானேநீ வழித்தெடுத்த பதங் கம்வெள்ளை-மயமான பற்பத்தை யெடுத்துக்கொள்ளே. (259)

எடுத்துமே சீனத்தை பூதிநன்ருய்-இன்பமாய்ப் பதங்கமிடை சேர்த்துக்கொண்டு, அடுத்துமே வெண்கருவா லரைத்துக் கொண்டு-அடைவாக வில்லைதட்டிக் காயவைத்து, நடுத்துமே கிடத்திவிட்டு மேலேமூடி-நலமாகச் சீலைமண் வலுக்கச்செய்து, வடுத்துமே வாலை யென்ற அடுப்பிலிட்டு-வழியாகச் சாமமது யெரித்திடாயே. (260)

எரித்திடவே யடுப்பாற்றிப் பிரித்துப்பாரு - இதமாக அடியிலே நிற்குமப்பா, வரித்திடவே நெருப்புக்கு யேகிடாது-வடிவாக நெருப்பு தனிற் போட்டுப்பாரு, கரித்துமே யோடாது ஒளித்திடாது - கனிவா கச் செம்புதனிற் பத்துக்கொன்று, பரித்துநீ செம்புதனிற் கொடுத் துப்பாரு-பதிவாக மாத்தென்ன எட்டுமாமே. (261)

## வாலைரச பதங்கத்தால் தீரும் வியாதி.

ஆமேதா னந்திசந்தி பணங்கால்விதம் - அடைவாக வுண்டுவரப் பிணிகள்போகும், நாமேதான் வாதமெண் பத்துநாலும் - நலமான வுண்டத்தின் வாதமோடு, தாமேதான் விரைவாதம் சூலைபோகும்- தன்மையாய் முடக்கென்ற சூலைபோகும், தாமேதான் பித்தமுதல் சிலேத்மம்போகுந்-தாஷ்டிகமாய் விக்கத்தின் புத்துப்போமே. ( )

புத்துடனே யரையாப்பு கண்டமாலே - புகலரிய பிணிகளெல்லா மாண்டுபோகும், நித்துடனே மேனியது சொர்ணமாகும் - நிலுத்து டனே காயமது அழிந்திடாது, வித்துடனே வித்தாகும் விருப்ப மெத்த - விதமாக மகோதரங்கள் முப்பத்திரண்டும், நித்தியமாய்ப் போகுமது குஷ்டரோகம்-நிலையற்றே கருங்குஷ்ட மோடுந்தானே. ()

தானேதான் க்ஷயரோக மேகம்போகும் - தாஷ்டிகமாய் விந்தி றுகும் வடிவாம்மேனி, வானென்ற பச்சையென்ற நரம்புதானும்-வடிவாக பிறுகுமது வண்டுபோலாம், கானென்ற ஜலரோகம் லவண மேகங்-கருத்துடனே போகுமது கண்டுபாரு, கானென்ற ஆண்வமு மிகவுண்டாகும்-நலமாகச் சகலகலை சித்திபாரே. (264)

பாருநீ பத்தியத்தைச் சொல்லக்கேளு-பரிவான வுப்போடு நல் லெண்ணெய்யாகா, சாருநீ யுண்ணுவது சொல்லக்கேளு - சாக்ஷியாய்ப் பாலோடு வன்னமாகும், தாருநீ வன்னமது சம்பாநெல்லு-தாஷ்டிகமா யரிசியல்லால் வேறுமாகா, கூருநீ யன்னத்தைச் சமைத்துவுண்ணு-கூட்டோடே நோயெல்லாம் போகும்பாரே. (265)

போகுமே ரசபற்பந் தன்னைக்கண்டால்-போக்கோடே வண்ட ரண்ட முருகிப்போகும், வாகுமே சகலநோய் தீர்ந்துபோகும்-வடிவான ஆட்டெல்லாஞ் சூதத்தாட்டு, தாகுபெறக் கட்டினல் பொன்னு முண்டு-தாஷ்டிகமா யெல்லாமுஞ் சித்திமெத்த, ஏகுமே யெனையாண்ட் சித்தர்தாமுஞ்- இதமாகச் சொல்லினு ரின்பமாமே. (266)

இன்பமாம் வெடியுப்புச் செயநீர்வைத்து-இகமாக வுண்டிடவே காயஞ்சித்தி, அன்பாக யெல்லாமுஞ் சித்தியாகும் - அடைவான யோகசித்தி யாகுமப்பா, நன்பாகக் கற்றுணர்ந்த பெரியோருக்கு - நலமாக யெல்லாமுஞ் சித்தியாகும், வண்பாக யெல்லாமுஞ் சித்தி மெத்த - வகையாக யோகிக்கு மன்புமாமே. (267)

## கல்லுப்புக்கட்டு.

ஆமேதா னின்னமொன்று சொல்லக்கேளு-அடைவாக வுலகத் தில் வாதிக்குத்தான், வாமேதான் கல்லுப்புக் கட்டுக்கேளு-வடிவாகச் சொல்லுகிறேன் வழக்கமாக, நாமேதான் கல்லுப்பைக் கட்டிக்கொள் ளு-நாட்டிலே யெல்லாமுஞ் சித்தியாகும், பாமேதான் சித்தியெல்லா மேதாலாச்சு-பதிவாகச் சித்திதரும் பண்புமாமே. (298)

ஆமேதான் கல்லுப்புக் கரியிலாட - அடைவாகச் சொல்லுகிறே னருமையாக, நாமதான் கடல்நுரையும் பலமுமொன்று-நலமாகக் கல் லுப்புப் பலமுமெட்டு, வாமேதான் ரெண்டுமொன்று யுருக்கிக்கொண்டு -வடிவாக வதையுடைத்துக் கலசத்திட்டு, தாமேதான் சுத்தகெங்கை தன்னைவிட்டுத்-தாஷ்டிகமா யொன்றுக்குப் படியைக்கேளே. (266)

படிதானே யெட்டுவிட்டுப் பாகங்கேளு-பதிவாக அடிகனத்த சட் டியிட்டு, கொடியாகக் கொதிக்க வைத்து யிறக்க வுப்பாம் - கொடிக் குள்ளே காய்ச்சிநீ பாயக்காச்சி, குடியாகச் சீலைதனி லகப்பையாலே- குணமாக விட்டுநீ யுண்டையாக, பிடியாகக் கட்டியே யுண்டையா னல்-பிலக்கவே பண்ணியே காயப்போடே. (270)

## கல்லுப்புவேதை.

போடவே அதின்மேலே கவசங்கேளு - பொருமியே கடல் நுரைதான் ஒட்டிரெட்டி, வாடவே மேற்கவசங் கட்டிக்கொள்ளு- வடிவாகக் காய்வைத்து வழக்கமாக, நாடவே யிதைவைத்துச் சீவனத் தை-நலமாகச் செய்துநீ பின்புகேளு, கூடவே செம்புதா னுருக்கித் தானுங் - குணமாக வொன்றுதான் கொடுத்துப்பாரே. (271)

கொடுத்துமே பார்த்திடவே வசம்பு தானுங் - கொடிதான மாத்துதா னெட்டுமாகும், விடுத்துமே உப்புக்குங் காவிக்கேகா - விதமான ஞான சித்தி யோகமெய்தும், தடுத்துமே யெல்லாமுஞ் சித் தியாகுந்-தனியான வடிவுள்ள யோகியாகும், கடுத்துமே யாதாரவழி யிற் சென்று-கனிவாக யெல்லாமுங் கனிந்துபாரே. (272)

பாருமே பதினெட்டுச் சித்தர்தாமும்-பாகமாய்க் கைபாகம் சொல் லிப் போட்டார், பாருமே யிந்நூலிற் சொல்லி வைத்தேன் - பரிவாக யிதை வைத்துக் கண்டுதேரு, பாருமே ஆத்தாளைப் பூசை பண்ணிப்- பண்பாக வாதமதைச் செய்து தானும், பாருமே முன்னேதான் செலவுசெய்து-பதிவாக யெல்லாமுஞ் சித்தியாமே. (273)

## கிராணி பேதிகட்ட.

சித்தியா மின்னமொன்று சொல்லக்கேளு=சிறப்பாகக் கட்டு வகை தன்னைக்கேளு, புத்தியாங் கிராணிவகை யெல்லாமுந்தான், புக லாகப் போகவே சொல்லுவேன்பார், கந்தியாங் கட்டுவகை சொல்லக் கேளு-நலமாக அபினியோடு கிராம்புதானும், வித்திலே விளைந்தெழு த்த பூரணத்தை-விதமாக யெல்லாமுஞ் சித்தியாமே. (274)

ஆமேதான் பேதிதான் கட்டும்வாய்மை-அடைவாக அக்கிசக்தி கொள்வீராகில், வாமேதான் கிராணியெல்லா மோடிப்போகும் - வடிவாக யெல்லாமுஞ் சித்தியாகும், தாமேதான் சித்திதர வேணுமென்றால்-தாஷ்டிகமா யெல்லாமுஞ் சித்தியாகும், பாமேதான் பாகமது யெல்லாமாச்சு-பதிவாகக் சித்திதரும் பண்புமாமே. (275)

பண்புள்ள யென்னை யழைத்துப் பாகஞ் சொன்னார் - பதிவாகக் கைமுறைதான் பார்த்துச் சொன்னேன், நண்புள்ளோர் மனது வைத்துப் பார்க்கக்கேளு - நலமாகக் கைபாக மார்க்கந்தானும், ஊண்பாக யென்னையாண்ட அகத்திய மூர்த்தி-உறுதியாய்ப்போகமது வுண்மைபாரு, தண்மையா முனக்கேற்ற புத்திசொன்னேன் - தாஷ்டிகமா யெல்லாமும் பண்புமாமே. (276)

பண்பாக யுலகத்தில் மாண்பர்க்காகப்-பதிவாக வாதமுதல் வைத்தியஞ்சொன்னேன், நண்பாகப் பண்டிதத்தைக் கண்டுபோற்றி-நலமாக யெல்லாமுஞ் சித்தியாகும், வண்பாக வாதமெல்லா முப்பாலாச்சு-வளமாக உப்பைமுந்திக் கட்டிப்பாரு, தண்பாக யெல்லாமுஞ் சித்தியாகும்-தாஷ்டிகமாய் நல்லபுத்தி நலமதாமே. (277)

நலமாக வாதமொடு வைத்தியந்தானும்-நலமறியான் பண்டிதத்தின் பெருமைகாணார், பிலமாக யெல்லாமுஞ் சித்திமெத்த-பிசகாமல் வாதவித்தை பேணிப்பாரு, கலமான வாதிமக னறிவானப்பா-கருத்தழிந்து போகாதே யுலகுதன்னில், வலமாக யெல்லாமும் வந்துதோற்றும்-வடிவாக வைத்தியந்தான் சித்தியாமே. (278)

சித்திதர வேதென்றாற் சொல்லக்கேளு-செகத்திலே வாழ்வதற்கு வாதமார்க்கம், புத்தியாய் வாதமொடு வசியமாகும் - புகலாதே யெல்லாமு மனேக வித்தை, நத்தியே யவர்களுடன் வருந்தினக்கால் - நலமாக யெல்லாமும் சித்தியாகும், சத்தியமாய்ப் பிழைக்கவே யுலகோர்க்காகச்-சாதகமாய்ச் சொல்லிவிட்டே னுலகிற்றானே. (279)

தானென்ற யுலகத்தோர் சுட்டுக்கெட்டு-தாஷ்டிகமா யஞ்செழுத்து மெட்டெழுத்தும், வானென்ற வுலகத்தோர் சிரிப்பாரப்பா-வடிவான காயசித்தி - யோகசித்தி யாகும், நானென்ற ஆணவத்தாற் கெட்டோ மென்று - நலமாகத் திரிந்தலைந்து மாளுவார்கள், தானென்ற குருக்கிடையும் கருக்கிடையும் வேணும் - கனிவாகப் பார்த்தறிந்தாற் சித்தியாமே. (180)

ஆமேதான் பார்த்தறிய வேணுமென்றால்-அடைவாக யெல்லாமுஞ் சித்தியாகும், காமேதான் சித்திதா னறிந்தபேர்கள் - கனிவாக வறிவார்கள் யெல்லாந்தானும், நாமேதான் சித்திபெற்று லெல்லாமாச்சு-நலமாகச் சித்திதரும் நட்புமாகும், வாமேதான் சித்திக்க வேணுமென்றால்-வடிவான யோகமது மருவிப்பாரே. (281)

மருவியே யின்னமொன்று வண்மைகேளு - வடிவான பெண்ணுடனே ஆணுஞ்சேர்ந்து, உருவியே வுருவதுவுந் தரித்தாப்போலே-உண்மையா யிதைவைத்து முன்னே செய்து, நருவியே வுடல்குறிப்புக் கண்டுதேறு-நலமாகப் பொன்னாகுங் கண்டுதேறு உருதியாய்ச் செய்தாலே யெல்லாஞ்சித்தி- ஒருவருடன் பேசாதே யுண்மைபாரே. ()

## தாளக பற்பம்.

பாருநீ தாளகமும் பலமுமொன்று-பதிவாகக் கட்டியா யெடுத்துக்கொண்டு; தாருநீ வளையலுப்புப் பலமும்நாலு - தாஷ்டிகமாய்ப் பாணிவிட்டு அரைத்துநேராய், ஊருமே தாளகத்தின் மேலேகட்டி-உற்றுமே தனிலே வாட்டுவாட்டு, சாருமே நன்றாகக் குமுறவாட்டு-சரியாக அனலெழும்ப வாட்டிடாயே. (283)

வாட்டியே தண்ணீரில் தூக்கிப்போடு - வடிவாக வுப்பெல்லாங் கரைந்துபோகும், கூட்டியே எடுத்துப்பார் சிவந்து நிற்குங்-குணமாகச் சிவந்திருந்த செந்தூரத்தை, நீட்டியே யதையெடுத்து வைத்துக்கொண்டு - நிலையாக யிஞ்சிநீர் வுவர்மண்நேராய், மூட்டியே கலந்துநீ சட்டியிட்டு-மோகமா மாகுமினி சொல்லக்கேளே. (284)

சொல்லவே தாளகச்செந் தூரங்கட்டிச்-சுகமாக வைத்துநீ மேலேதானும், நல்லவே மூடியே யம்மிவைத்து - நலமாக மேலேநீ சட்டிமூடி, கல்லவே சீலைமண் வலுக்கச் செய்து - கனிவாக அடுப்புதனிலேற்றி நன்றாய், மல்லவே யிருசாம மெரித்துப்பாரு - மயமாகத் தள்ளியே யெடுத்திடாயே. (285)

எடுத்திட்டு வெய்யல்தனி லெட்டுநாள் தான்-இதமாக வைத்திட்டுப் பார்க்கும்போது, அடுத்திட்டு வெள்ளையாய்ப் பூத்திறந்து-அடைவாகப் பற்பமது வாகும்பாரு, வடுத்துமே பற்பத்தை யெடுத்துக்கொண்டு-வடிவாக வீரமதற் கிடையேசேர்த்து, நடுத்துமே யிருசாமங் கல்வத்தாட்டி-நலமாக வில்லைபண்ணிக் காயவையே. (286)

காயவைத்துப் பின்புதான் சொல்லக்கேளு - கனிவாகக் கெட்டித் விட்டு மேலேமூடி, மாயவே சீலைசெய்து யெரித்தா யானல்-மயமாக வில்லைதான் அடியில்நின்று, நயவாக யேறாது யிருக்குமப்பூ, நல மாக யிருந்திடவே நன்றாய்க்கேளு, சாயவே யந்திசந்தி தேனிற் கொள்ளச்-சரியாகப் பத்தியத்தைத் தாக்கிடாயே. (287)

## தாளகப் பற்பத்தால் தீரும் வியாதி.

தாக்கிடவே யெலிகடிகள் போகும்பாரு- தாஷ்டிகமாய் வாய்வு களும் போகும்பாரு, வாக்கிடவே ருத்திரமாம் வாய்வும்போகும்- வடி வான முயல்வலிப்பு மேகவாய்வு, பாக்கிடவே காசமுதல் பறந்து போகும்-பதிவாக யெல்லாமுஞ் சித்தியாகும், ஆக்கிடவே சோறுபா லுண்ணலாகும்- அடைவாகயெல்லாமுஞ் சித்திகாணே. (288)

காணவே மகோரதங்க லெல்லாம்போகும்-கனிவாகச் சித்திதருங் கருத்துள்ளோர்க்கு, ஊணவே யொருவருடன் பேசவேண்டாம்-ஊ றுமே மகோதாமு மோடிப்போகும், நாணவே நாலான கண்டமாலை- நாட்டிலே யில்லாது நயந்துபாரு, வாணவே வல்லமையாந் தேகந் தானும்-வடிவான பொருளாகும் வண்மைபாரே. (289)

பாருமே சரக்கைமுந்திக் கட்டிப்பாரு-பதிவாக யுலகுதனிற் பண் டிதங்கள், காருமே முன்னேதான் பார்த்துத்தேறு-கனிவாக ரசலிம்பம் லிங்கபற்பஞ், சாருமே கைபாக மாகவைத்துச்-சரியாக வுண்டிடவே நோய்கள்போகும், வாருமே கைபாக மாகச்செய்து-வடிவாகத் தின்றி டவே வண்மையாமே. (290)

ஆமேதா னுலகத்திற் பண்டிதங்கள்- அடைவான கைபாக மார்க்கத் தாலே, வாமேதா னறிந்திடவே சித்திமெத்த- வடிவாக வறியாட்டால் சங்கமாண்டி, நாமேதா னறிந்தவனே சித்தன்சித்தன்-நலமாக வறியா ட்டால் யோகியல்ல, சாமேதா னறிந்தவனே புத்திமானுஞ் - சரியாக யின்னதென்று சாத்துவேனே. (291)

சாத்துவேன் லோகத்து வாதிதானுஞ் - சரியாக வாதமொடு வசி யந்தானும், பாத்துமே பொய்ப்பாடு யென்பார் லோகர் - பதிவாக வறிந்தவனே சித்தனவான், காத்துமே யிருந்தாலே யோகியோகி-கரு ணைபெற யறிந்தவனே கனகவான்பார். காத்துநீ யறிந்துகட்ட நாட் டம்போல-நாடியே யெல்லாமும் நாடிப்பாரே. (292)

நாகரசச் செய்நீர்.

வாடியே யின்னமொரு கருவைக்கேளு-நாதாக்களாட்டெல்லாஞ் சொல்லக்கேளு, மூடியே சொல்லுகிறே னுற்றுக்கேளு-மூவுலகு சித்த ரெல்லா மேன்மையாக, வாடியே நாகமது செயநீராக- வடிவாக நாக மது பலமுமொன்று, கூடியே சூதமது பலமுமொன்று - குணமாக நாகமது யுருக்கிடாயே. (293)

உருக்கியே கரண்டிதனிற் சூதத்துள்ளே-உணர்வாக விட்டல்லோ யெண்ணெய்குத்தி, நருக்கியே யாறவிட்டு யெடுத்துப்பார்த்தால்-நல மாக பூட்டாகுங் கல்வத்திட்டு, பெருக்கியே வீரமதை யிடையேயிட்டு -பேதமா யரைத்துநீ சாமம்நாலு, வருக்கியே நீராகுஞ் செயநீராகும்-வடிவாகு மிந்நீரில் மார்க்கங்கேளே. (294)

துருசிச் செந்தூரம்.

கேளுநீ யிந்நீரிற் பூரமிட்டுக் - கெடியான பீங்கானி லிறுத்துக் கொண்டு, வாளுநீ துருசுதனைத் தோய்த்துத்தோய்த்து - வடிவாகப் போடவே யெட்டுநாள்தான், மாளுமே துரிசியது சிவந்துமிற்கும் வடிவாக வதின்மேலே கவசங்கட்டு, காளுமே வண்டமது சுன்னம் பண்ணிக்-கனிவாக வரைத்துமே துரிசிமேலே. (295)

மேலாகக் கட்டியே காயவைத்து - மெதுவாகக் காடையென்ற புடத்திலவைத்து, காலாக யெடுத்துப்பார் செந்தூரமாகும்-கனமான வருணன்போ லாகுமப்பா, நாலாக சூதமது பலமும்நாலு நலமாகத் திராவகத்தால் பூர்க்கவிட்டு, சாலாகத் துரிசுசெந் தூரத்தோடே-சரியாகச் சேர்த்துநீ யரைத்திடாயே. (296)

அரைத்துநீ கவசமதை வுண்டைபண்ணி - அடைவாகக் காயவைத்துப் பின்புகேளு, பரைத்துமே கிடத்திலிட்டே யெரித்தாயானால்-பரிவான செந்தூர முருக்கம்பூப்போல், கரைத்துநீ வெள்ளிதான் மூன்றுமாகுங்-கனிவாகச் செந்தூரம் ரெண்டுமாகும், முரைத்துநீ உருக்கிப் பார் தங்கமாகும் - முறையாக யெல்லாமுஞ் ஜெயமுமாமே. (297)

ஆமேதான் தங்கத்தை விற்றுத்தானே-அடைவாகச் செலவுபண்ணிப் பசியைத் தீர்த்து, வாமேதா னுண்டுடுத்தி வழியைத்தேடி வடிவாக ஞானவழி யடுத்துக்கூடு, சாமேதான் சுழிமுனையை யடுத்துத் தேடு -சரியான லோகமது கண்டாற்சேரும், பாமேதான் யெல்லாமுஞ் சித்தியாகும்-பதிவாகச் சகலசித்தும் பண்புமாமே. (298)

ஆமேதான் மண்டலத்தி லந்திசந்தி - அடைவாக வுண்டிடவே நோய்கள்போகும், நாமேதான் வாதத்தின் ரோகம்போகும் - நலமான பித்தசிலேற் பனங்கள்போகும், வாமேதான் வாதசித்தி யுடனேயாகும்-வடிவாகக் காயமுதல் வண்மையாகும், சாமேதான் சொன்னபடி யெல்லாந்தீருஞ்-சரியாகப்போகுமே தன்மைதானே. (299)

தானாக நோயெல்லாந் தவுடுபொடியாகுந்-தாஷ்டிகமாய் நரை திரைக ளற்றுப்போகும், வானாக விதுலெகுவு முன்னேபாரு - வடிவாகச் சித்திதரும் வண்மை மெத்த, தானாக நோய்தீரும் மருந்து வைத்துத் - தாஷ்டிகமா யுண்டிடவே நோய்கள் போகும், வேனான் குருவருளாற் சொல்லிப் போட்டேன் - வேதாந்த சாஸ்திரத்தின் விபரந்தாமே. (300)

தாமேதான் கும்மியெழு நூறும்பாடி - தயவாக வைந்நூறும் பாடினேனென்பார், வாமேதான் விளங்கவில்லை யென்று சொல்லி - [illegible]வாக மூந்நூறை வகுத்தேனப்பா, சாமேதான் நோய் தீரும் மருந்து வைத்து - சரியாகப் பார்த்தோர்க்குத் தோணுந் தோணும் நாமேதான் உலகறியச் சொல்லிப் போட்டோம் - நன்மைதரும் மூநூறு நயமாமுற்றே, (301)

## புலஸ்தியர் வாத சூஸ்திரம் 300

முற்றிற்று.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 10662
EGMORE, MADRAS-600 008